# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

## மானியக் கோரிக்கை எண். 44

**தா.மோ. அன்பரசன்**

ஊரகத் தொழில் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2021

# உள்ளடக்கம்


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 11 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) | 87 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) | 111 |
| 5. | தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) | 117 |
| 6. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (M-TIPB) | 149 |
| 7. | தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) | 164 |

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2021–2022

## 1. முகவுரை

தமிழ்நாடு சிறு தொழில் உற்பத்தியில் மிக நீண்ட பண்டைய கலாச்சாரம் உடையது. மதுரை கீழடியில் தொல்லியல் துறையின் அகழ்வாய்வு மூலம் அப்பகுதியில் 2,600 வருடத்திற்கு முன்பே துணி நூல் உற்பத்தி மற்றும் அதிநவீன மண்பாண்ட உற்பத்தி நடைபெற்று வந்தது என்ற விவரம் அறிய வருகிறது. சங்க கால இலக்கியங்களும் அப்பகுதியில் நேர்த்தியான தரத்தில் பருத்தி ஆடைகள் தயாரிக்கப்பட்டு வந்ததாக குறிப்பிடுகின்றன. மேலும் பண்டைய தமிழ்நாட்டில் உலோக வேலை, தச்சு வேலை, கப்பல் கட்டுதல், உப்பு தயாரித்தல், அணிகலன்கள் தயாரித்தல் போன்ற தொழில்கள் பரவலாக நடைபெற்று வந்தன. பண்டைய தமிழகத்தின்

உற்பத்தி பொருட்களுக்கு கிரேக்கம் மற்றும் ரோமன் நாடுகளில் மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. தொழிற்புரட்சியினை தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் தொழிற்சாலை சார்ந்த உற்பத்தி நவீன மாற்றம் பெற்றதை காணமுடிகிறது. நவீனம் சார்ந்த தொழிற்சாலைகளில் தோல், துணிநூல் மற்றும் சர்க்கரை தொழில்கள் முதலில் தொடங்கப்பட்டன. உள்ளூர் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க ஆங்கிலேய ஆட்சி காலத்திலேயே மெட்ராஸ் மாகாண அரசால் முயற்சிகள் எடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியாவிலேயே முதன் முறையாக, 1906ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொழில் துறை செயல்பாட்டிற்கு வந்தது. 1923ஆம் ஆண்டு மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சில் (Madras Legislative Council) இயற்றிய தொழில் துறைக்கான மாநில உதவிச் சட்டம் (State Aid to Industries Act) குடிசை மற்றும் கிராமப்புற தொழில்களுக்கான அரசு உதவியினை அனுமதித்தது.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, 1958ஆம் ஆண்டு நாட்டின் முதல் தொழிற்பேட்டை கிண்டியில் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில், 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) நிறுவப்பட்டது. இது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

இன்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. தோல் மற்றும் தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், வாகன பாகங்கள், வார்ப்புகள், பம்புகள் மற்றும் ஆயத்த ஆடைகள் போன்ற பல தொழில்களில் தமிழ்நாடு தலைமைத்துவம் பெற்றுள்ளது.

இந்தியாவில், அதிக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமையப்பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவதாக உள்ளது. தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் நடத்திய

தேசிய மாதிரி கணக்கெடுப்பின் 73–வது சுற்றின்படி, தமிழ்நாட்டில் சுமார் 49.48 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளதுடன் (இது நாட்டில் உள்ள மொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 8% ஆகும்) 96.73 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பும் வழங்குகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 18,65,419 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரை வர்த்தக வங்கிகள் வாயிலாக ரூ.1,05,929.46 கோடி கடன் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## 1.1 இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் பங்கு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலை உருவாக்கத்தில் முக்கிய

இயக்கிகளாக உள்ளன. இவை பெரு நிறுவனங்களைவிட குறைந்த முதலீட்டில் வாழ்வாதார மூலங்களை வழங்கி ஒட்டுமொத்த சமூக–பொருளாதார மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும் பெரும் பங்கு வகிக்கின்றன. ஊரக மற்றும் பின்தங்கிய பகுதிகளின் தொழில்மயமாக்கலை எளிதாக்குகின்றன. ஆகையால், இவை மண்டல ஏற்றத்தாழ்வுகளையும் கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு குடிபெயர்தலை குறைத்தலில் உதவி, இவ்விதமாக தேசிய வருமானம் மற்றும் செல்வ வளம் ஆகியவற்றில் நடுநிலையுடைய பகிர்வினையும் மறைமுகமாக ஊக்குவிக்கின்றன.

ஒன்றிய அரசின் தேசிய புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சக தேசிய கணக்கெடுப்பு அலுவலகம் நடத்திய தேசிய மாதிரி கணக்கெடுப்பு (NSS) 73–வது சுற்றின் படி, 633.88 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 11.10 கோடி பேருக்கு

வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன. இவற்றில் சுமார் 51% குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஊரக நிறுவனங்களாகும். மேலும், இத்துறை இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29.7% பங்கினையும், இந்திய ஏற்றுமதியில் 49.66% பங்கினையும் கொண்டுள்ளது. இத்துறை குறுந்தொழில்கள் முதல் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வரை பல்வேறு அளவுகளில் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களை உள்ளடக்கியது ஆகும்.

## 1.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புதிய வரையறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம்–2006 இயற்றப்பட்ட பின்னர் சிறு தொழில்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களை

வகைப்படுத்துவதற்கான புதிய வரன்முறைகளை ஒன்றிய அரசு சமீபத்தில் அறிவித்தும் மற்றும் முந்தைய பதிவு நடைமுறைகளுக்கு பதிலாக உத்யம் பதிவை அறிமுகப்படுத்தியும் உள்ளது.

ஒரு நிறுவனமானது, பின்வரும் கூட்டு அளவுகோல்களின் அடிப்படையில் குறு, சிறு அல்லது நடுத்தர நிறுவனமாக வகைப்படுத்தப்படுகிறது:

| **நிறுவனங்களின் வகைப்பாடு** | **இயந்திர மற்றும் தளவாடங்களின் முதலீடு மிகாமல்** | **விற்றுமுதல்*** |
|---|---|---|
| குறு நிறுவனங்கள் | ரூ.1 கோடி | ரூ.5 கோடி |
| சிறு நிறுவனங்கள் | ரூ.10 கோடி | ரூ.50 கோடி |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.50 கோடி | ரூ.250 கோடி |

*ஏற்றுமதி வருவாய் தவிர

ஜூலை 2, 2021 அன்று ஒன்றிய அரசு, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கீழ் கடன் பெறும்

முன்னுரிமைத்துறை என்ற நோக்கத்திற்காக கொண்டு வந்தது.

## 1.3 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இத்துறையில் நிர்வாக கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட முக்கிய அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன:

அ. தொழில் வணிக ஆணையரகம் (Commissionerate of Industries & Commerce)

ஆ. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Tamil Nadu Small Industries Development Corporation Ltd. (TANSIDCO))

இ. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (Tamil Nadu Small Industries Corporation Ltd. (TANSI))

ஈ. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்

(Entrepreneurship Development and Innovation Institute – Tamil Nadu (EDII–TN))

உ. தாய்கோ வங்கி / இண்ட்கோசர்வ் மற்றும் சேகோசர்வ் (TAICO Bank / INDCOSERVE / SAGOSERVE) போன்ற கூட்டுறவு நிறுவனங்கள்

ஊ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன வர்த்தக முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (MSME Trade and Investment Promotion Bureau (M–TIPB))

எ. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்(TANSIM)

## 1.4 இத்துறையின் பத்தாண்டு தொலைநோக்கு பார்வை

இத்துறை, கீழ்க்கண்ட பத்தாண்டு தொலைநோக்கு பார்வையை நோக்கி செயல்பட திட்டமிட்டுள்ளது.

அ) ரூ.5 இலட்சம் கோடி முதலீட்டை ஈர்த்தல்

ஆ) 50 இலட்சம் நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

இ) அனைத்து குறு நிறுவனங்களுக்கும் முறையான வங்கிக் கடன் இணைப்பு இருப்பதை உறுதி செய்தல்

ஈ) குறுந்தொழில் நிறுவனங்களில் 10%–ஐ சிறு / நடுத்தர நிலைக்கு உயர்த்துதல்

உ) தேசிய ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கை 15% ஆக உயர்த்துதல்

ஊ) 10,000 ஏக்கர் நில வங்கியை உருவாக்குதல்

எ) 15 பெருங்குழுமங்கள் மற்றும் 100 பொது வசதி மையங்கள் நிறுவுவதன் மூலம் போட்டித்தன்மையை மேம்படுத்துதல்

ஏ) தமிழ்நாட்டினை இந்தியாவில் மிகவும் துடிப்பான புத்தொழில்–நட்பு மாநிலமாக உருவாக்குதல்

ஐ) சமச்சீரான வட்டார தொழில்துறை மேம்பாடு

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம், பல்வேறு மானிய திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டை எளிதாக்கி ஊக்குவிக்கிறது. அதன் ஏனைய பொறுப்புகள் பின்வருமாறு:

- மாநிலம் முழுவதும் தொழில்களின் சமமான வளர்ச்சியை உறுதி செய்தல்
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதை எளிதாக்குதல்
- துறைகளுக்கு இடையேயான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கிய பொருட்கள்

மீது வர வேண்டிய தொகையினை, கால தாமதமின்றி பெற்றுத்தர குறு, சிறு நிறுவனங்களுக்கான வசதியாக்க குழுக்கள் மூலம் தீர்வு காணுதல்

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் களையும் வண்ணம் அரசின் கொள்கைகளை உருவாக்கிட உதவுதல்
- தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல்
- பல்வேறு துறைகளுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, தொழில் வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்துதல்
- மாநில அரசின் பல்வேறு நிறுவனங்களுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளுவதுடன் மற்றும் நிதியைப் பெற்று வழங்கும் அதிகார அமைப்பாக செயல்படுதல்

## 2.1 மாவட்டத் தொழில் மையங்கள்

தொழில் வணிக ஆணையரக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் 37 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் செயல்படுகின்றன. தொழில்முனைவோருக்கான உகந்த திட்டங்களை அடையாளம் காணுதல், திட்ட அறிக்கைகள் தயாரித்தல், பல்வேறு அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் பெறுதல், அரசின் திட்டங்களின் மூலம் நிதி உதவியை ஏற்படுத்துதல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை அனுமதித்தல் ஆகியனவற்றிற்கு ஆதரவளிக்க இம்மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளன.

புதிதாக மயிலாடுதுறை மாவட்டத்தில் மாநிலத்தின் 38–வது, மாவட்டத் தொழில் மையத்தினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 2.2 உத்யம் பதிவு

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், 26.06.2020 நாளிட்ட அறிவிக்கை எஸ்.ஓ 2119 (இ)–ன் படி ஜூலை 1, 2020 முதல் உத்யம் பதிவினை முந்தைய உத்யோக் ஆதார் பதிவறிக்கை சான்றிதழுக்கு பதிலாக அறிமுகப்படுத்தியுள்ளது. உத்யம் பதிவு என்பது புதிய நிறுவனங்கள் மற்றும் செயல்பாட்டிலுள்ள நிறுவனங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாக வகைப்படுத்துதலுக்கான முதலீடு மற்றும் விற்றுமுதல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டது. இத்தொழில்முனைவோர் ஒன்றிய அரசின் உத்யம் பதிவு இணைய முகப்பில் http://udyamregistration.gov.in பதிவினை தாக்கல் செய்ய இயலும்.

உத்யம் பதிவு அறிமுகப்படுத்தியதிலிருந்து 01.07.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 4,01,379 தொழில்முனைவோர் உத்யம் பதிவு சான்றிதழ் பதிவு செய்து, ரூ.53,801.75 கோடி முதலீடு மற்றும் 41,69,352 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. (**இணைப்பு 1**). தமிழ்நாடு இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான உத்யம் பதிவு செய்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை கொண்டுள்ளது.

## 2.3 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படுகிறது.

### 2.3.1 முதலீட்டு மானியம்

மாநிலத்தில் முதலீட்டை ஈர்ப்பதற்காக முதலீட்டு மானிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் சிறப்புகள் கீழ்க்கண்டவாறு

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25% அதிகபட்சமாக ரூ.150 இலட்சம் வரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது.
- குறு நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்களின் முதலீட்டு மதிப்பில் கூடுதலாக 10 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது.
- மகளிர் / பட்டியலினத்தோர் / பட்டியல் பழங்குடியினர் / மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கையர் நடத்தி வரும் தொழில் நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர

தளவாடங்களின் முதலீட்டு மதிப்பில் கூடுதலாக 5% அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்களின் முதலீட்டு மதிப்பில் கூடுதலாக 25% அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள குறு மற்றும் சிறு உற்பத்தி தொழில் நிறுவனங்கள் பன்முகத்தன்மை மற்றும் விரிவாக்கத்தின் மூலம் உயரிய பிரிவை அடையும் போது மதிப்பில் கூடுதலாக 5% அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை முதலீட்டு மானியத்திற்கு தகுதி பெறுகிறது.

**முதலீட்டு மானியம் பெறும் நிறுவனங்களின் அடிப்படைத் தகுதிகளாவன**

- மாநிலத்தில் புதியதாக நிறுவப்படும் அனைத்து குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- மாநிலத்தில் புதியதாக அமைக்கப்படும் உற்பத்தி சார்ந்த சிறு மற்றும் நடுத்தர முக்கியத்துவம் வாய்ந்த பிரிவின் கீழ்வரும் 23 சிறப்பு வகை தொழில் நிறுவனங்கள்

1. மின் மற்றும் மின்னணு பொருட்கள்
2. தோல் மற்றும் தோல் பொருட்கள்
3. வாகன உதிரி பாகங்கள்
4. மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள்
5. சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
7. மாசு கட்டுப்பாட்டு சாதனங்கள்
8. விளையாட்டு பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள்

9. சிக்கன விலை கட்டுமான பொருட்கள்
10. ஆயத்த ஆடைகள்
11. உணவு பதப்படுத்துதல்
12. நெகிழி ('ஒரு முறை பயன்படுத்தி' தூக்கி எறியப்படும் நெகிழி நீங்கலாக)
13. இரப்பர் உற்பத்தி நிறுவனங்கள்
14. 'ஒரு முறை பயன்படுத்தி' தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களுக்கு பதிலான மாற்றுப்பொருட்கள்
15. மின் வாகன பாகங்கள், மின்னேற்ற கட்டமைப்புகள் மற்றும் அதன் பாகங்கள்
16. மருத்துவ உபகரணங்கள் மற்றும் அதன் பாகங்கள்
17. தொழில் நுட்ப ஜவுளி மற்றும் மருத்துவ ஜவுளி
18. விண்வெளி, பாதுகாப்புத் துறை உபகரணங்கள் மற்றும் அதன் பாகங்கள்

19. மின்னணு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி
20. உயிரி தொழில்நுட்பம்
21. பெட்ரோலிய இரசாயனம் மற்றும் சிறப்பு இரசாயனங்கள்
22. தொழில் 4.0
23. மின்னணு கழிவு மறுசுழற்சி

- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 254 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய வேளாண்சார்ந்த சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மேற்கண்ட வகைகளை சார்ந்த தற்போது நடைமுறையில் உள்ள நிறுவனங்களின் பெரிய அளவிலான விரிவாக்கம் மற்றும்

மாற்று தொழில்கள், முதலீட்டு மானியம் பெற தகுதியானதாகும்.

நடப்பு நிதியாண்டில், 31.07.2021 வரை 1,975 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.168 கோடி முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.280 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**2.3.2 குறைந்தழுத்த மின் மானியம்**

குறைந்தழுத்த மின் மானியம், புதிய மற்றும் நடப்பு குறுந்தொழில் நிறுவனங்கள், குறைந்தழுத்த மின்சாரத்தை பயன்படுத்தி விரிவாக்கம் மற்றும் பன்முகத்தன்மைபடுத்துவதற்காக வணிக ரீதியாக உற்பத்தியை தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாளில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு மின் பயன்பாட்டு தொகையில் 20% வழங்கப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில், 31.07.2021 வரை 305 நிறுவனங்களுக்கு ரூ.2.47 கோடி குறைந்தழுத்த மின்மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2021–22க்கான வரவு–செலவு திட்ட மதிப்பில் இந்த திட்டத்திற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.3.3 ஊதியப்பட்டியல் மானியம்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தப்பட்டிருப்பின் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு முதலாளியின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியருக்கு அதிகபட்சமாக ரூ.24,000/–, மூன்று ஆண்டுகளுக்கு புதிய மானிய திட்டமான ஊதியப்பட்டியல் மானியம் வழங்கப்படும்.

**தகுதி வரம்பு**

- மாநிலத்தில் அனைத்து பகுதிகளிலும் நிறுவப்படும் குறு உற்பத்தி நிறுவனங்கள்

- தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய வட்டாரங்கள் சென்னையிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பாற்பட்ட தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்
- மாநிலத்தில் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு ஊதியப்பட்டியல் மானியம் வழங்கப்படும்

நடப்பாண்டில் ஊதியப்பட்டியல் மானியத்திற்கு ரூ.1 கோடி வரவு–செலவு திட்ட மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.4 பின்–முனை வட்டி மானியம் (BEIS)

குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களில், தொழில் நுட்ப மேம்பாடு / நவீனப்படுத்துதலுக்காக ரூ.5 கோடி வரையிலான

கடன் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றுக்கு அதன் வட்டியில் 5 ஆண்டுகளுக்கு 5% அதிகபட்சமாக ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்டு பின்–முனை வட்டி மானியமாக வழங்கப்படும். அவ்விதமே, கடன் உத்தரவாத நிதி ஆதாரத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5% அதிகபட்சமாக ரூ.20 இலட்சத்திற்குட்பட்டு குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களில் நிறுவனம் ஒன்றிற்கு 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படும்.

2021–22 ஆம் நிதியாண்டில், 31.07.2021 நிலவரப்படி 176 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.39 இலட்சம் பின்–முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு ரூ. 2.40 கோடி ஆகும்.

### 2.3.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம்

இந்த திட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்களின் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துதல், உற்பத்தி செலவினங்களை குறைத்தல் மற்றும் உலக சந்தைகளில் போட்டித் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசானது, ஒரு நிறுவனத்திற்கு ஒரு ஆற்றல் தணிக்கை மேற்கொள்ள ஆகும் செலவில் 75% அதிகபட்சமாக ரூ.1 இலட்சத்திற்கு உட்பட்டு தொகையை திருப்பி அளிக்கும். ஆற்றல் தணிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துதல், மாற்றியமைக்கப்படும் எந்திரங்கள் மற்றும் கருவிகளின் மறுசீரமைப்பு மற்றும் ஆற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக பெறப்படும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் மதிப்பில் 50% அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரையும்

ஊக்கத்தொகையாக திரும்ப வழங்குகிறது. இந்த திட்டத்திற்கான நடப்பாண்டு வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு ரூ.4.92 கோடி ஆகும்.

### 2.3.6 தரச்சான்றிதழுக்கான கட்டணங்களை திருப்பித்தரும் (Q–cert) திட்டம்

இத்திட்டமானது, மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை செயல்முறை மற்றும் தயாரிப்புகளுக்கான ISO 9000/ ISO 9001/ ISO 14001/ ஆபத்து பகுப்பாய்வு மற்றும் நெருக்கடியான கட்டுப்பாட்டு நுட்பம் (HACCP), ISO 22000, நல்ல சுகாதார நடைமுறைகள் சான்றிதழ் (GHP), நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் (GMP), இந்திய தர நிர்ணய கட்டுப்பாட்டுச் சான்றிதழ் (BIS), பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ் (ZED) அல்லது இந்தியாவில் தகுதிவாய்ந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு தரச்சான்றிதழ் போன்ற தரநிலைகள் / சான்றிதழ்கள் பெற ஊக்குவிக்கிறது. தரச்சான்றிதழ் பெறுவதற்கான

ஆலோசனைக்கட்டணம் மற்றும் சான்றளிக்கும் நிறுவனக்கட்டணம் ஆகியவற்றிற்கு 100% அதிகபட்சமாக தேசிய தரச்சான்றிதழ் பெறுவதற்கு ரூ.2 இலட்சம் வரையிலும் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதற்கு ரூ.10 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இந்த திட்டத்திற்கான வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு ரூ.1.02 கோடி ஆகும்.

### 2.3.7 மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்

அரசானது, ஆரம்ப பொது சேவைகளைப் பயன்படுத்தி மாநிலத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவை ஆகிய இரு துறைகளிலும் SME பங்கு சந்தையை பயன்படுத்தி மூலதனத்தை திரட்டி அதிக வளர்ச்சி அடைதலை எளிதாக்குவதற்கு ரூ.30 இலட்சத்திற்கு உட்பட்டு ஆரம்ப பங்கு வெளியீடு செய்வதற்காக செலவிடப்பட்ட தொகையை திரும்ப வழங்கி உதவி

செய்கிறது. நடப்பாண்டில் இந்த திட்டத்திற்கான வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு ரூ.1 கோடி ஆகும்.

### 2.3.8 காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடுகள் பதிவுக்கான ஊக்கத்தொகை

தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து புதிய மற்றும் தற்போதுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் புத்தொழில்கள்) காப்புரிமை பதிவுக்காக செலவிடப்பட்ட தொகையில் 75%, ரூ.3 இலட்சத்திற்கு மிகாமலும் மற்றும் வர்த்தக முத்திரை பதிவு அல்லது புவிசார் குறியீடு பதிவுக்காக செலவிட்டப்பட்ட தொகையில் 50% ஒவ்வொரு பதிவுக்கும் ரூ.25,000/–க்கு மிகாமல் இத்திட்டத்தில் வழங்கப்படும். நடப்பாண்டு வரவு–செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ.1.84 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.9 முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்குதல்

தொழில் வளர்ச்சியில் பின்தங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் தொடங்கப்படும் புதிய குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்காக வாங்கப்படும் நிலங்களின் மதிப்பில் பதிவுத் துறைக்கு செலுத்தப்படும் முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணத்தில் 50% திரும்ப வழங்கப்படும். நடப்பாண்டு வரவு–செலவு திட்டத்தில், இத்திட்டத்திற்கு ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள்

### 2.4.1 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

மாநில அரசு, சமுதாயத்தின் விளிம்பு நிலை பிரிவினருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கத்துடன் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

தொழில்முனைவோர் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ரூ.15 இலட்சம் வரையிலும், சேவைகள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக, ரூ.5 இலட்சம் வரையிலும் தொழில் தொடங்க கடன் பெற இயலும். இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீட்டில் 25% (அதிக பட்சம் ரூ.2.50 இலட்சம்) மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் பங்களிப்பு, சிறப்புப்பிரிவின் கீழ் வரும் பட்டியல் இனம் / பட்டியல் பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் படைவீரர் / மாற்றுத் திறனாளிகள் / திருநங்கையர் ஆகியோருக்கு 5% மற்றவர்களுக்கு 10% ஆகும்

இத்திட்டத்தில் பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு 35 ஆண்டுகள் மற்றும் சிறப்புப்பிரிவினருக்கு 45 ஆண்டுகள் ஆகும். 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற கல்வி தகுதியுடைய எந்த

தனியரும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியானவர் ஆவார்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தினை இணையதளத்தில் தாக்கல் செய்ய இயலும்.

2020-21-ஆம் ஆண்டில், 3,591 பயனாளிகளுக்கு ரூ.3,300 இலட்சம் மானியமாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில், 31.07.2021 நிலவரப்படி 785 பயனாளிகளுக்கு ரூ.762.62 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. நடப்பாண்டிற்கான இந்த திட்டத்திற்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ரூ. 41.88 கோடி ஆகும்.

## 2.4.2 பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசு பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தினை 2008–09ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்துகிறது.

உற்பத்தி தொழில்களின் கீழ் அனுமதிக்கப்படும் திட்டத்தின் அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ.25 இலட்சம் மற்றும் சேவைத் தொழில்களுக்கு ரூ.10 இலட்சம் ஆகும். திட்டமதிப்பீட்டில் பயனாளியின் பங்களிப்பாக பொது பிரிவினர் 10% மற்றும் சிறப்பு பிரிவினர் (பட்டியல் இனம்/ பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள் / வடகிழக்கு பகுதிகள் / மலை மற்றும் எல்லையோர பகுதிகள் மற்றும் பிற) 5% செலுத்த வேண்டும். ஒன்றிய அரசானது திட்ட மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு மானியங்களை வழங்கும்:

| பிரிவு | திட்ட மதிப்பீட்டில் மானிய விழுக்காடு | |
|---|---|---|
| | நகர்புறம் | கிராமப்புறம் |
| பொதுப்பிரிவு | 15% | 25% |
| சிறப்புப்பிரிவு (பட்டியல் இனம் / பழங்குடியினர் /பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள் / வடகிழக்கு பகுதிகள் / மலை மற்றும் எல்லையோர பகுதிகள் மற்றும் பிற) | 25% | 35% |

மொத்த திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகை வங்கிகளால் கடனாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் இணையதளத்தில் தங்கள் விண்ணப்பத்தினை தாக்கல் செய்ய வேண்டும்.

2020-21ஆம் ஆண்டில், 2,940 பயனாளிகளுக்கு ரூ.6,739.24 இலட்சம் விளிம்புத்

தொகை மானியமாக வழங்கப்பட்டது. 2021–22ஆம் ஆண்டில், 31.07.2021 நிலவரப்படி 464 பயனாளிகளுக்கு ரூ.1,330.19 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

### 2.4.3 புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

"புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்)", படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோராக மாற்றுவதற்கு தமிழ்நாடு அரசால் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பயனாளிகளின் வயது வரம்பு பொது பிரிவினருக்கு 21 வயதுக்கு மேல் 35 வயது வரையிலும், சிறப்பு பிரிவினர் மற்றும் மகளிருக்கு 21 வயதுக்கு மேல் 45 வயது வரையிலும் இருக்க வேண்டும். மேலும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில்

இருந்து ஏதாவது ஒரு பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு / ஐடிஐ / தொழிற் பயிற்சி குறைந்தபட்ச கல்வித்தகுதி தேவைப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 தொழில் ஆர்வலர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். 19% பட்டியல் இனம் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆதரவற்ற மகளிருக்கான முன்னுரிமையுடன் மகளிருக்கு 50% இலக்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு சென்னையில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் 15 நாட்கள் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. தங்கள் உற்பத்தி அல்லது சேவைத் தொழில் நிறுவனங்களைத் தொடங்க திட்ட அறிக்கை தயாரிப்பதிலும் மற்றும் வங்கிகள்/ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியற்றிடமிருந்து காலக்கடன் பெறுவதற்கும் தேவையான அனைத்து விதமான உதவிகளும்

செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற் பேட்டைகளிலுள்ள மனைகள் / தொழிற்கூடங்களில் இடம் இருக்கும் பட்சத்தில் அரசால் அவர்களுக்கு வழங்கப்படும்.

திட்ட மதிப்பீட்டில் 25% என்ற விகிதத்தில் தனிநபர்கள் முதலீட்டு மானியமாக (ரூ.50.00 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்குவதோடு, வங்கிக் கடனுக்கான வட்டியில் 3% பின்–முனை வட்டி மானியமாக திரும்ப செலுத்தும் காலம் முழுவதும் வழங்கப்படுகிறது. குறைந்தபட்ச திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மேலும் மற்றும் அதிகபட்சம் ரூ.5.00 கோடி வரையும் ஆகும். திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு திட்ட செலவில் பொதுப் பிரிவினருக்கு 10%, சிறப்பு பிரிவினருக்கு 5% ஆகும்.

2021–22ஆம் ஆண்டில், 31.07.2021 நிலவரப்படி, ரூ.24.81 கோடி அரசின் தனிநபர்–சார் மானியம் பெறத்தக்க 151 திட்டங்களுக்கு இறுதி

ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை தனிநபர் முதலீட்டு மானியமாக ரூ.18.37 கோடி 239 பயனாளிகளுக்கும், பின்-முனை வட்டி மானியமாக ரூ.3.26 கோடி 274 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்த திட்டத்திற்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ரூ.100 கோடி ஆகும்.

இந்தத் திட்டத்தின் துணைத் திட்டமாக, கொரோனா நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக நாடு திரும்பிய புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு உதவும் நோக்கில் நீட்ஸ் - புலம் பெயர்ந்தோருக்கான சிறப்பு முன்னெடுப்பு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்துணைத் திட்டம் 2023-24 வரை செயல்படுத்தப்படும்.

## 2.5 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றை சாளர தீர்வு முறை

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் வணிக நடைமுறைகளை எளிதாக்கவும், உள்நாட்டு மற்றும் பன்னாட்டுத் தொழில் முதலீட்டாளர்களுக்கு இணக்கமான சூழலை உருவாக்கவும், தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் 2018–ஐ இயற்றியதோடு தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் விதிகளை வகுத்துள்ளது. இது தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும், செயல்படும் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும், தொழில் நிறுவனங்களை தொடர்ந்து நடத்தவும் தேவையான ஒப்புதல்கள், உரிமங்கள் மற்றும் உரிமப்புதுப்பித்தல்களுக்கான விண்ணப்பங்களை ஒரே இடத்தில் விண்ணப்பிக்க வழிவகை செய்கிறது. இச்சட்டம் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை

எடுக்கப்படுவதையும் உறுதி செய்கிறது. விண்ணப்பதாரர் தம் குறைகளைப் பதிவு செய்து உரிய தீர்வு பெறவும், உரிமம் வழங்கும் தகுதி பெற்ற அலுவலர்கள் தம் கடமைகளைச் செய்யத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு தண்டம் விதிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தைச் செயல்படுத்திட வடிவமைக்கப்பட்ட இணைய வழி ஒற்றைச் சாளரத் தகவு மூலம் 24 அரசுத் துறைகள் மற்றும் அரசு சார் அமைப்புகள் வழங்கும் 102 சேவைகளைப் பெறலாம்.

31.07.2021 வரை பெறப்பட்ட 1,372 விண்ணப்பங்களில் 1,337 விண்ணப்பங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

## 2.6 சந்தை வாய்ப்பு

குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு அரசால் கீழ்க்கண்ட சந்தை வாய்ப்பு உதவிகள் விரிவு செய்யப்படுகின்றன.

- இம்மாநிலத்திலும் மற்ற மாநிலங்களிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கண்காட்சி நடத்தும் நேர்வுகளில் அரங்க வாடகைக்கு ஈடாக சந்தை வாய்ப்பு உதவியாக திரும்ப தரப்படும் அடிப்படையில் 50% மானியமாக வழங்கப்படுகிறது.

- அரசு மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்களின் மொத்தக் கொள்முதல் தேவையின் 25% இம்மாநில குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்காக கொள்முதலில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

## 2.7 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006–இன்படி சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான

வசதியாக்கக் குழுக்களை அரசு அமைத்து, குறு மற்றும் சிறு நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களுக்கான தொகையை உரிய காலக்கெடுவிற்குள் பெறுவதில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது.

2020−21ஆம் நிதியாண்டில் 40 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு 123 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான தொகை ரூ.1,201.57 இலட்சம் பெற்றுத் தரப்பட்டது. நடப்பு நிதியாண்டில், 11 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு 44 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான ரூ.1204.48 இலட்சம் பெற்றுத் தரப்பட்டது.

## 2.8 சோதனை சேவைகள்

பல்வேறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், அரசுத் துறைகள் மற்றும் தனியார் நுகர்வோர் ஆகியோரின் இறுதி உற்பத்தி

பொருள்களின் தரத்தை எளிதாக்கும் பொருட்டும், பல்வேறு கொள்முதல் முகமைகளால் நிர்ணயிக்கப்பட்ட தரத்தை உறுதிப்படுத்தவும், நிறுவனங்களுக்கு மலிவு விலையில் சோதனை சேவைகளை வழங்க கீழ்க்காணும் சோதனைக் கூடங்களை அரசு ஏற்படுத்தி உள்ளது:–

(அ) மத்திய மின்பொருள் சோதனை கூடம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்

(ஆ) கிண்டி இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி மண்டல சோதனைக்கூடங்கள்

மேலும் சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வகம் (MICAL) என்ற பெயரில் ஒரு கூட்டுறவு சோதனைக்கூடமும் உள்ளது. அது பற்றிய விவரங்கள் கூட்டுறவு பகுதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

### 2.8.1 மத்திய மின்பொருள் சோதனைக் கூடம், காக்களூர்

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது நாடு முழுவதும் அமைந்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, 1973 ஆம் ஆண்டில் மத்திய மின் பொருள் சோதனைக்கூடம் நிறுவப்பட்டது.

இச்சோதனைக்கூடமானது, இந்திய தர சபையின் ஒரு வாரிய அங்கமான சோதனை மற்றும் அளவொப்புமை ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார குழுமம் (என்.ஏ.பி.எல்) மற்றும் ஒன்றிய அரசின் நுகர்வோர் அமைச்சக இந்திய தர நிர்ணய அமைவனம் (பி.ஐ.எஸ்) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

இந்த சோதனைக்கூடமானது, இந்தியாவிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், இந்திய தர நிர்ணய அளவீட்டின்படி, மின்பொருள், மின் கம்பிவடப்

பொருட்கள் மற்றும் மின் உபகரணங்களைத் தயாரிக்கும் தொழில்முனைவோருக்கு சோதனை செய்யும் வசதிகள் அமையப்பெற்று அளிக்கின்றது. மின்பொருள் உற்பத்தி செய்யும் தொழில்முனைவோர்களுக்கு சோதனை வசதிகளை வழங்குகிறது. இந்த சோதனைக்கூடமானது அங்கீகார நிலையை தொடர்ந்து பேணுவதற்கு உபகரணங்கள்/கருவிகளை வாங்கி நிறுவப்படுவதன் மூலமும், உபகரணங்கள்/கருவிகளை குறித்த காலங்களில் அளவொப்புமை செய்தும் அவ்வப்போது பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

மாவட்ட தொழில் மையங்களின் உரிய அதிகாரம் பெற்ற அதிகாரிகளால் வெளிசந்தையில் சேகரிக்கப்பட்ட மின்பொருட்களின் மாதிரிகள், இந்திய தர நிர்ணய அமைவனம் (பி.ஐ.எஸ்), மூலம் வழங்கப்பட்ட மாதிரிகளும் இந்த சோதனைக்கூடத்தில் சோதனை செய்யப்படுகின்றன. தமிழக அரசு இந்த ஆய்வகத்தை, அரசுத்துறைகள், அரசு சார்ந்த

நிறுவனங்களால் மின் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வாங்குவதற்கு ஒரு தர ஆலோசகராக நியமித்துள்ளது.

இச்சோதனைக்கூடத்தால், 2020–21 ஆம் ஆண்டில் 4,123 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, சோதனைக் கட்டணங்களாக ரூ.127.02 இலட்சம் பெறப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் ஜூலை 2021 முடிய 468 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, சோதனைக் கட்டணங்களாக ரூ.10.25 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

### 2.8.2 இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு சோதனைக் கூடங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, இரயில்வே, காவல்துறை போன்ற இதர அரசுத்துறைகளுடன் தனியார் நுகர்வோர்க்கு அவர்களின் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி பொருட்களை சோதனை செய்வதற்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வசதிகளை

இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி மற்றும் மண்டல சோதனை ஆய்வுக்கூடங்கள், மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகியன வழங்குகின்றன. இந்த சோதனைக் கூடங்கள் எஃகு, சிமெண்ட், செங்கல், தண்ணீர், மணல், இரப்பர், தாதுக்கள் மற்றும் கனிமங்கள், சுண்ணாம்பு, நிலக்கரி, கிருமி நாசினித்தூள் போன்றவற்றிற்கான சோதனைகளை மேற்கொள்வதுடன் அதற்கான வசதிகளை மிகக் குறைந்த சோதனைக் கட்டணத்தில் வழங்குகின்றன.

## 2.9 தரக்கட்டுப்பாடு ஆணைகளை செயல்படுத்துதல்

ஒன்றிய அரசினால் வெளியிடப்பட்டுள்ள, இந்திய தர நிர்ணய அமைவனச் சட்டம், 2016ன் கீழ் பெறப்பட்ட பல்வேறு தரக்கட்டுப்பாடு ஆணைகளை இத்துறை செயற்படுத்துகிறது. தரக்கட்டுப்பாடு ஆணைகளை அமல்படுத்தவும், நுகர்வோரிடையே தரமான மின் பொருட்களை உபயோகிக்க

விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 'அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்' ஆக மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர்களும், சென்னையில் மண்டல இணை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டு உபயோக மின் பொருட்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1981, எண்ணெய் அழுத்த அடுப்புகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1997 மற்றும் மின்கம்பிகள், வடங்கள், உபகரணங்கள் மற்றும் மின் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் பாகங்கள் (தரக்கட்டுப்பாடு ஆணை) 2003 ஆகிய தரக்கட்டுப்பாடு ஆணைகள் அமல்படுத்தப்படுகின்றன.

## 2.10 பயிற்சி நிலையங்கள்

தொழில் நுட்ப திறனை உரிய துறைகளால் மேம்படுத்துவதற்கான பொருத்தமான பயிற்சியினை கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனங்கள் வழங்குகின்றன:

### ❖ பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், விருத்தாச்சலம்

விருத்தாச்சலத்தில் இயங்கி வரும் பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பீங்கான் தொழில்நுட்பத்தில் 3½ ஆண்டு பட்டயப்பயிற்சி வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 50 மாணவர்கள் முதலாமாண்டில் சேர்க்கப்படுகின்றனர். மேலும், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 5 மாணவர்கள் இரண்டாம் ஆண்டில் பிற்சேர்க்கையாகவும் அனுமதிக்கப்படுகின்றனர். இப்பயிற்சி நிலையம் அகில இந்திய தொழில் நுட்பக் கழகத்தால் அனுமதி வழங்கப்பட்டு தொழில்நுட்ப இயக்ககத்துடன் இணைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

- **அரசினர் அறிவியல் கண்ணாடிப் பயிற்சி மையம், கோயம்புத்தூர்**

கோயம்புத்தூரில் உள்ள அறிவியல் கண்ணாடிக் கருவிகள் பயிற்சி மையம், 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் ஓராண்டு செய்முறை பயிற்சிப் படிப்பும் மற்றும் இரண்டு மாத குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கி வருகிறது.

- **அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்**

அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் 1972–ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருவதுடன் வேளாண்மைத்துறை, தடய அறிவியல் துறை மற்றும் சுகாதாரத் துறை ஆய்வகங்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய ஆய்வக கண்ணாடி பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

- **அரசினர் தொழில் நுட்ப பயிற்சி மையம், கிண்டி, சென்னை**

சென்னை கிண்டியில், 1962–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசினர் தொழில்நுட்ப பயிலகம், கருவி மற்றும் அச்சு பொறியியல் மற்றும் குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல் ஆகிய துறைகளில் மூன்று ஆண்டு பட்டயப்படிப்புகளை வழங்குகிறது. இப்பட்டயப்படிப்புகள் அனைத்திந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தின் அங்கீகாரத்துடன் நடத்தப்படுவதுடன் இப்பயிலகத்தால் ஒவ்வொரு ஆண்டும் 3 ஆண்டு பட்டயப்படிப்புகளுக்காக 119 மாணவர்கள் (108 மாணவர்கள் முதலாம் ஆண்டில் (முறையானது) மற்றும் 11 மாணவர்கள் பிற்சேர்க்கையாக இரண்டாம் ஆண்டில்) சேர்க்கப்பட்டு பயிற்சி படிப்புகள் நடத்தப்படுகின்றன.

❖ **கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்**

திண்டுக்கல், கருவி பொறியியல் பயிலகம், 1961–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அனைத்திந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் பட்டயப்படிப்பில் 3 ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டயப்படிப்பை வழங்குகிறது. இப்பயிலகம் ஒவ்வொரு ஆண்டும், 3 ஆண்டு பட்டயப்படிப்பில் 49 மாணவர்களை (45 மாணவர்கள் முதலாம் ஆண்டில் (முறையானது) மற்றும் 4 மாணவர்கள் பிற்சேர்க்கை முறையில் இரண்டாம் ஆண்டிற்கு) அனுமதிக்கிறது.

**2.10.1 காக்களூரில் மின் பொருள்களை சோதனை செய்வதற்கான பயிற்சி அளித்தல்**

உற்பத்தி செய்யப்படும் மின்பொருள்களின் தரத்தினை மேம்படுத்த, மத்திய மின் பொருள் சோதனைக் கூடம், காக்களூரில் உற்பத்தியாளர்களுக்கு குறுகிய காலப் பயிற்சிகள்

முறையாக நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வுக்கூடத்தில் அமைந்துள்ள சோதனை வசதிகள் பயிற்சியாளர்களுக்கு செயல்முறை பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. இதுவரையில் 437 வெவ்வேறு நிறுவன பணியாளர்கள் காக்களூரில் உள்ள மத்திய மின் பொருள் சோதனைக் கூடத்தால் அளிக்கப்பட்ட பயிற்சியினால் பலனடைந்துள்ளனர்.

பி.வி.சி. கம்பி வடங்கள், மிக்சிகள், மின் விசிறிகள், சுவிட்ச்கள், ப்ளக்ஸ் மற்றும் ஸாக்கெட்டுகள், ஒளிரும் குழல் விளக்குகள், ஒளிரும் குழல் விளக்குக்குண்டான ஸ்டார்ட்டர்கள், ஒளிரும் குழல் விளக்குக்குண்டான சோக்குகள், மின் அளவு மானிகள், மூழ்கும் நீர் சூடேற்றிகள், சேமிப்பு நீர் சூடேற்றிகள், பி.வி.சி குழாய்கள் மற்றும் மின் பொருத்தி சாதனங்கள் போன்ற மின்பொருள்களை சோதனை செய்வதற்கான பல்வேறு பயிற்சி படிப்புகள் வழங்கப்படுகின்றன.

### 2.10.2 திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் செய்முறை பயிற்சி, மாதம் ஒன்றுக்கு ரூ. 5,000/– ஊக்கத்தொகையுடன் அதிகபட்சமாக 6 மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு, ஒருவருக்கு ரூ.2,000/– வீதம் அதிகபட்சமாக ரூ.12,000/– வரை அரசு மானியமாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு திரும்ப வழங்கப்படுகிறது. 2020–21 ஆம் ஆண்டில் 14,627 நபர்களுக்கு 241 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. 2021–22ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் திறன் வளர்ப்பிற்காக 25,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2.11 தொழில்முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழக அரசு, சிறந்த தொழில் முனைவோர்களுக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன் அளிக்கும் வங்கிகளுக்கும், மாநில/மாவட்ட அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை மேம்படுத்துவதற்காக கீழ்க்காணுமாறு விருதுகள் அளிக்கின்றது:

| வ. எண் | விருதுகளின் வகைப்பாடு | விவரம் |
|---|---|---|
| அ | மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கான விருது | ரூ.50,000/- ரொக்கப்பரிசு மற்றும் நினைவுப்பரிசு |
| ஆ | மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கான வேளாண்மை-சார் தொழில்களில் சிறந்த தொழில் முனைவோருக்கான விருது | ரூ.50,000/- ரொக்கப்பரிசு மற்றும் நினைவுப்ரிசு |

| | | |
|---|---|---|
| இ | மாநில அளவிலான தரம் மற்றும் ஏற்றுமதிக்கான சிறந்த தொழில் முனைவோர் விருது | ரூ.50,000/– ரொக்கப்பரிசு மற்றும் நினைவுப்பரிசு |
| ஈ | மாநில அளவிலான மகளிர் தொழில்முனைவோருக்கான சிறந்த விருது | ரூ.50,000/– ரொக்கப்பரிசு மற்றும் நினைவுப்பரிசு |
| உ | மாவட்ட அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கான விருது | நினைவுப்பரிசு |
| ஊ | வங்கிகளுக்கு முதலமைச்சரின் விருது.<br>i. முதல் பரிசு<br>ii. இரண்டாம் பரிசு<br>iii. மூன்றாம் பரிசு | நினைவுப்பரிசு<br>நினைவுப்பரிசு<br>நினைவுப்பரிசு |

## 2.12 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தமிழ்நாட்டின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆவார். தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான குறிக்கோள், பொருளாதாரத்தில்

நலிவுற்ற கிராமப்புற கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு பயனுள்ள தொடர் வேலைவாய்ப்பினை அளிப்பதாகும். மேலும் இச்சங்கங்கள் விவசாயிகள் பயிரிடும் தேயிலை மற்றும் மரவள்ளிக் கிழங்குக்கு நியாயமான விலை கிடைக்க உதவி புரிகின்றன. மேலும், குறு மற்றும் சிறு தொழில் முனைவோருக்கு அவர்கள் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும், தொழில் கூடங்களையும் அளித்து வருகின்றன.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், தேயிலை, சவ்வரிசி, வங்கி, கயிறு, அச்சகம், பொறியியல், கூட்டுறவுத் தொழிற்பேட்டை, கைவினைப் பொருட்கள், தையல், தொழிலாளர் ஒப்பந்த சேவை, ஆட்டோ சேவை போன்ற வர்த்தகங்கள் மற்றும் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மற்றும்

சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு நிலையம் (மைகால்), சென்னை போன்ற தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், சிறப்புப் பிரிவுகளுக்கான எடுத்துக்காட்டுகளாக செயல்படுகின்றன.

இத்துறையின் கீழ் தற்பொழுது 299 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 236 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. 2020–21ஆம் ஆண்டு இத்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.1,179.94 கோடி மதிப்பிற்கு விற்றுமுதல் செய்துள்ளன. மேலும் 2020–21ஆம் ஆண்டில் இச்சங்கங்களின் மூலமாக 11,251 தொழிலாளர்களுக்கு ரூ.253.55 கோடி கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.12.1 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

நீலகிரியில் சுமார் 25,000 தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, 16 தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள்

இயங்கி வருகின்றன. இக்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 2020−21ஆம் ஆண்டில் 536.95 இலட்சம் கிலோ பசுந்தேயிலையை தன் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்து 136.87 இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்து ரூ.16,441.88 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன. 2020−21ஆம் ஆண்டு தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் தங்கள் விவசாயி−உறுப்பினர்களிடமிருந்து கிலோ ஒன்றுக்கு சராசரியாக ரூ.19.33ஐ வழங்கி பசுந்தேயிலையை கொள்முதல் செய்துள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற 16 தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளில் 9 தொழிற்சாலைகள் இலாபத்திலும், 7 தொழிற்சாலைகள் நட்டத்திலும் இயங்கி வருகின்றன. இந்த 16 தொழிற் கூட்டுறவுத் தேயிலைச் தொழிற்சாலைகள் 2020−21ஆம்

ஆண்டில் ஒட்டுமொத்த நிகர இலாபமாக ரூ.5.42 கோடி (தணிக்கைக்கு முன்) ஈட்டியுள்ளன.

## 2.12.2 இண்ட்கோசர்வ்

1965ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு தேயிலை சிறு விவசாயிகள் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் இணையம் (இண்ட்கோசர்வ்), தமிழ்நாட்டில் உள்ள நியாய விலைக் கடைகள் மூலம் 'ஊட்டி டீ'யை விற்பனை செய்து வருகிறது. இண்ட்கோசர்வ், பெருமளவில் நீலகிரி தேயிலையை 'ஊட்டி டீ' விற்பனைக்காக கொள்முதல் செய்வதன் மூலம் தேயிலைச் சந்தையில் நீலகிரி தேயிலைக்கு உள்ள தேவையை நிலைநிறுத்தவும் பொது மக்களுக்கு நியாயமான விலையில் தேயிலை கிடைக்கவும் உறுதி செய்கிறது. 2020-21ஆம் ஆண்டில் இண்ட்கோசர்வ் 39.38 இலட்சம் கிலோ தேயிலையை ரூ.6,963.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு விற்பனை செய்து நிகர இலாபமாக

ரூ.502.82 இலட்சம் (தணிக்கைக்கு முன்) ஈட்டியுள்ளது. "டான் டீ" மற்றும் தேயிலை கூட்டுறவு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத்தூள், குன்னூர், துடியலூர் மற்றும் கொச்சியிலுள்ள இண்ட்கோசர்வின் சேமிப்பு கிடங்குகளில் சேமிக்கப்படுகிறது. இம்மூன்று சேமிப்பு கிடங்கின் மொத்த பரப்பளவு மற்றும் தேயிலைத்தூள் கொள்ளளவு 54,841 சதுரடி மற்றும் 2010 மெட்ரிக் டன் ஆகும். 2020–21ஆம் ஆண்டில் சேமிப்பு கிடங்கு வசதி வழங்கியதன் மூலம் இண்ட்கோசர்வானது ரூ.115.82 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. இண்ட்கோசர்வானது பொது விநியோக திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 2,400 மெட்ரிக் டன் விநியோகம் செய்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.3,777.05 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. 2020–21ஆம் ஆண்டில் கேரளா சப்ளைகோ (Kerala SUPPLYCO)–விற்கு 1,250 மெட்ரிக் டன் மவுண்ட்டேன் ரோஸ் தேயிலைத்தூளினை

ரூ.35.14 கோடி மதிப்பிற்கு இண்ட்கோசர்வ் வழங்கியுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் பெறப்பட்ட ஆணையின்படி 35 நாட்களுக்குள் தமிழ்நாடு அரசின் கோவிட்–19 சிறப்பு நிவாரணத் தொகுப்பில் இண்ட்கோசர்வானது 4,196 மெட்ரிக் டன் ஊட்டி தேயிலைத்தூளினை ரூ.89.64 கோடி மதிப்பிற்கு விநியோகித்துள்ளது. இண்ட்கோசர்வானது 7 புதிய டீ வகைகளை (Brand) அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது தர மேம்பாட்டின் அடிப்படையில் சந்தைப்படுத்தலுக்கான முயற்சிகள் மற்றும் புதிய சந்தைகளை புதுப்பிக்கப்பட்ட டீ வகைகள் (Brand) மூலம் விரிவுபடுத்தும் முயற்சி ஆகியவற்றில் ஈடுபட ஏதுவாக நியாய வர்த்தக சான்றிதழ் மற்றும் டிரஸ்டீ சான்றிதழ் ஆகியன பெற்றுள்ளது.

**கேட்டச்சின் எனப்படும் மதிப்பு கூட்டப்பட்ட தேயிலை உற்பத்தி**

நீலகிரி மாவட்டத்தில் கைகாட்டி தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில்

ரூ.2.98 கோடி செலவில் இமாலயன் உயிரிவள தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து தேயிலை பாலிபினால்ஸ் (Polyphenols) / பசுந்தேயிலைசாறு கலந்த கேட்டச்சின் எனப்படும் மதிப்புகூட்டப்பட்ட தேயிலை உற்பத்தி பிரிவு ஒன்று தொடங்கப்படவுள்ளது. மேலும் கேட்டச்சின் பிரித்தெடுத்தல் பிரிவின் கட்டுமானம் நிறுவுதல் மற்றும் செயல்படல் ஆகியன டிசம்பர் 2021–க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மேட்டுப்பாளையத்தில் தேயிலை குழுமம் அமைத்தல்**

கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் ரூ.15.50 கோடி செலவில் ஒரு தேயிலை தொகுப்பு மையம் அமைக்கப்படவுள்ளது. இதன் சிறப்பு நோக்க அமைப்பில் (Special Purpose Vehicle), தேயிலை வாங்கும் தொழிற் சாலைகள் மற்றும் இண்ட்கோ தேயிலை தொழிற் சாலைகள் உள்ளிட்ட சுமார் 80 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இத்திட்டம் சேமிப்பு கிடங்கு, கலத்தல் வசதி மற்றும் பகுப்பாய்வு

கூடத்திற்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுடன் பொதுவான வசதி மையத்தை உருவாக்க உதவுகிறது.

**தேயிலை தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கல் – நபார்டு கடன் உதவி**

தமிழக அரசு, நீலகிரி மாவட்டத்தில் ரூ.1,854.45 இலட்சம் திட்டமதிப்பீட்டில் குந்தா, மஞ்சூர், பந்தலூர், கைகாட்டி மற்றும் சாலிஸ்பரி ஆகிய ஐந்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை நவீனப்படுத்த, நபார்டின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. 5% அரசின் பங்களிப்பான ரூ.88.45 இலட்சம் மற்றும் 2020–2021 ஆண்டில் 30% நபார்டின் கடன் தொகையான ரூ.502.82 இலட்சம் ஆகியவை அரசிடமிருந்து பெறப்பட்டு முன்னதாக திட்டத்தை தொடங்குவதற்கு ஏதுவாக இண்ட்கோசர்வ் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### 2.12.3 தேயிலை உற்பத்தியாளர் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (டீசர்வ்)

தேயிலை விற்பனையில், வெளிப்படையான தேயிலை விற்பனையை உறுதி செய்யவும் விற்பனை மூலம் தேயிலை உற்பத்தியாளர்களின் தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும் தேயிலை விற்பனையில் இடைத்தரகர்களை நீக்கவும் 'டீசர்வ்' என்றழைக்கப்படும் மின்னணு ஏல மையம் குன்னூரில் 28.8.2002 இல் கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. 2020−21 ஆம் ஆண்டு இந்த ஏல மையம் ரூ.11,617.97 இலட்சம் மதிப்பிலான 10,271 மெட்ரிக் டன் தேயிலையை விற்பனை செய்து ரூ.43.45 இலட்சம் (தணிக்கைக்கு முன்) நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. மேலும், டீசர்வ் 23.09.2020 முதல் தேயிலை வாரியத்தின் பான் இந்தியா மின்னணு ஏல நடைமுறையை பின்பற்றி செயல்பட்டு வருகின்றது.

### 2.12.4 சேகோசர்வ்

"சேகோசர்வ்" என்று அழைக்கப்படும் சேலம் கிழங்குமாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் 21.7.1981 இல் பதிவு செய்யப்பட்டு தனது உறுப்பினர்களான கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசியினை பொது ஏல முறையில் விற்பனை செய்து நியாயமான விலை கிடைப்பதற்கு வழி செய்கிறது. இச்சங்கத்தின் முக்கிய குறிக்கோள் சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு வியாபாரத்திலுள்ள இடைத்தரகர்களை நீக்கி, மரவள்ளிக் கிழங்கிலிருந்து பெறப்படும் உற்பத்திப் பொருளை நல்ல விலைக்கு விற்பனை செய்ய உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குவதே ஆகும்.

இச்சங்கமானது நுகர்வோருக்கு தரமான சவ்வரிசி வழங்குவதற்காக குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்,

ஒன்றிய அரசின் நிதி உதவி மூலம் சவ்வரிசிக் குழுமம் ஒன்று அமைத்து அதன் மூலம் பகுப்பாய்வு கூடத்தினை பொது வசதி மையமாக ஏற்படுத்தியுள்ளது. சேகோசர்வ் சங்கமானது, தனது உறுப்பினர்களுக்கு நிதி உதவி மற்றும் சேமிப்பு கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகின்றது. சேகோசர்வ் தனது சேமிப்பு கிடங்குகளை நவீனமயமாக்க திட்டங்களை வகுத்து வருகிறது.

மேலும், இச்சங்கங்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், உலகளவில் சந்தைப்படுத்தவும் மற்றும் மின்னணு ஏலத்தை தொழில்நுட்ப வளர்ச்சியோடு வெளிப்படையாக நடத்தும் பொருட்டும் மின்னணு ஏல மையம் சேகோசர்வில் தொடங்கப்பட்டுள்ளது. இத்தகைய மின்னணு ஏல மையத்தின் முக்கிய நோக்கம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி விற்பனையில் வெளிப்படை தன்மையை ஏற்படுத்துவதே ஆகும். 2020-21 ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.534.21 கோடி

மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.2.54 கோடி (தணிக்கைக்கு முன்) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

### 2.12.5 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

தாய்கோ வங்கி தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு காலக்கடன், காசுக்கடன், கடன் தள்ளுபடி வரம்பு போன்ற கடன் வசதிகளை அளிப்பது போன்ற பிரதான நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. மேலும் தாய்கோ வங்கி இதர வகை கடன்களான நகைக் கடன், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கடன், தேசிய பாதுகாப்பு பத்திரங்களின் ஈட்டின் பெயரில் கடன், தனிநபர் கடன், வீடு அடமானக் கடன், வீடு கட்ட கடன், அதிகப்பற்று கடன் மற்றும் அரசின் திட்டங்களான வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் கடன் (UYEGP), முதல் தலைமுறை தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்திற்கு கடன் (NEEDS), கயிறு

தொழில்களுக்கு ரிமோட் திட்டத்திற்கு கடன் போன்ற கடன்களையும் வழங்கி வருகின்றது.

தாய்கோ வங்கி தற்போது 47 கிளைகளுடன் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றது. அனைத்துக் கிளைகளும் மைய வங்கியியல் தீர்வின் (CBS) கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும் கடந்த 01.07.2015 முதல் நிகழ் நேர பணப் பரிவர்த்தனை (RTGS) மற்றும் தேசிய மின்னணு பணப் பரிவர்த்தனை (NEFT) வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மொபைல் வங்கி சேவையும் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2020-21ஆம் ஆண்டில் இவ்வங்கி ரூ.1282.91 கோடி வைப்புத் தொகை திரட்டி ரூ.615.60 கோடி கடன் மற்றும் முன் பணம் அளித்து ரூ.5.37 கோடி (தணிக்கைக்கு முன்) நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 31.07.2021இன் படி வங்கியின் மொத்த செயல்படாத சொத்துக்களின் சதவீதம் 7.05% (தணிக்கைக்கு முன்) ஆகும்.

### 2.12.6 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

10,887 உறுப்பினர்களைக் கொண்டு 64 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மொத்த பங்கு மூலதனம் ரூ.272.38 இலட்சம் ஆகும். இதில் அரசு பங்கு மூலதனம் ரூ.227.72 இலட்சமும் அடங்கும். 2020-21ஆம் ஆண்டில், இச்சங்கங்கள் ரூ.27.57 கோடி மதிப்பீட்டிற்கு கயிறு பொருட்களை விற்பனை செய்துள்ளன. 2020-21ஆம் ஆண்டில் கயிறு சங்கங்களின் மூலமாக 10,887 உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு, கூலியாக ரூ.392.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.12.7 கயிறுக் குழுமங்கள்

கயிறுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்கில் மதிப்பு கூட்டப்பட்ட கயிறு பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாட்டில் பாரம்பரிய தொழில்களை புத்துயிரூட்டும் திட்டத்தின் (SFURTI) கீழ் 9 கயிறுக் குழுமங்கள் ரூ.37.79 கோடி மதிப்பீட்டில்

ஒன்றிய அரசின் கயிறு வாரிய நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழக அரசு, கயிறுப் பொருட்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 3 கயிறுக் குழுமங்கள் "கயிறுக் குழுமங்களை மேம்படுத்துதல் திட்டத்தின்" கீழ் ரூ.22.00 கோடி மதிப்பீட்டில் நெகமம் கயிறுக் குழுமம் (கோயம்புத்தூர் மாவட்டம்), நொய்யல் கயிறுக் குழுமம் (ஈரோடு மாவட்டம்) மற்றும் பூதலூர் கயிறுக் குழுமம் (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகியவற்றை அமைத்திட அனுமதி வழங்கியுள்ளது.

### 2.12.8 அச்சக சேவை கூட்டுறவுச் சங்கங்கள்

அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும், சிறு அச்சக உரிமையாளர்களுக்கு அச்சுப் பணிகளைப் பெற்றுத் தரும் நோக்கத்துடனும் அச்சகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்கள் அரசுத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள்,

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அச்சுப் பணி ஆணைகள் பெற்று அவற்றினை தங்களது உறுப்பினர் அச்சகங்கள் மற்றும் தொழிலாளர்கள் மூலம் நிறைவேற்றி வருகின்றன. தற்பொழுது 28 அச்சக சேவை சங்கங்களும் 3 அச்சக தொழிலாளர் சங்கங்களும் இயங்கி வருகின்றன. 2020-21ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.3,482.17 இலட்சத்திற்கு விற்று முதல் செய்துள்ளன.

### 2.12.9 பொறியியல் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

பித்தளை/தாமிரப் பாத்திரங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஊரக கைவினைஞர்கள், ஐ.டி.ஐ சான்றிதழ் பெற்றவர்கள், தகடு உலோக ஊழியர்கள், பட்டயத் தகுதி மற்றும் பட்டம் பெற்ற வேலையில்லாதோரை இச்சங்கங்களில் உறுப்பினர்களாக்கி வேலை வாய்ப்பு அளிப்பதே பொறியியல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின்

நோக்கமாகும். பொறியியல் சங்கங்களில் பூட்டுகள், நெசவு ஆலைகளுக்குத் தேவையான பாபின்கள், எஃகு அலமாரிகள், எஃகு உத்திரங்கள், இரும்பு கட்டுமான தொழிலுக்கு தேவையான மற்ற கட்டமைப்பு கருவிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், சில பொறியியல் சங்கங்கள் தானியங்கிகளை சர்வீஸ் செய்யும் பணி மற்றும் அறைகலன்களை பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்கின்றன. 1,719 உறுப்பினர்களைக் கொண்டு 16 பொறியியல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. 2020–21ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.1,616.61 இலட்சத்திற்கு விற்று முதல் செய்துள்ளன.

### 2.12.10 கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள்

இத்துறை 3,149 குறு மற்றும் சிறு தொழில்முனைவோர் உறுப்பினர்களாகக் கொண்டு சென்னை (வியாசர்பாடி), பொள்ளாச்சி, சிவகாசி, சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர்

மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் 11 கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் இத்துறையால் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிற் பேட்டைகளின் நோக்கம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள், தொழிற் கூடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அளித்து அவர்களின் தொழில் மேம்பாடு அடையச் செய்வதாகும். இத்தொழிற்பேட்டைகள் 2020–21ஆம் ஆண்டில் இந்த 11 தொழிற்பேட்டைகள் ரூ.105.70 இலட்சத்திற்கு விற்பனை இலக்கினை அடைந்துள்ளன.

### 2.12.11 கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டின் தொன்மை வாய்ந்த பாரம்பரிய கைவினைத் தொழில்களைப் பாதுகாக்கவும், ஊரகப் பகுதியிலுள்ள கைவினைஞர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் பல கைவினைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த கைவினைப்

பொருட்களில், வெண்கலச் சிலைகள், உலோகமணிகள், கலை வண்ணமிக்க உலோகத் தட்டுகள், சுவர் அலங்கார அமைப்புகள், மரச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், இசைக்கருவிகள், பொம்மைகள், அச்சிடப்பட்ட துணிவகைகள், மெழுகு பூசி வண்ணப்படங்களை அச்சடித்தல், செயற்கை வைரம் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகிய பொருட்கள் அடங்கும். தற்பொழுது 2,826 உறுப்பினர்களைக் கொண்டு 14 கைவினைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. 2020-21ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.144.69 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன.

### 2.12.12 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் உள்ள காவலர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த காவலர் தையற் தொழில்

கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. காவலர்களின் சீருடைகளை தைக்கும் பணியை இச்சங்கங்களின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வருமானம் ஈட்டி வருகின்றனர். 2,651 தொழிலாளர்களுக்கு/உறுப்பினர்களுக்கு பயனடையும் வகையில் 14 தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. 2020−21ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.490.88 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன.

### 2.12.13 தொழிலாளர் ஒப்பந்தச் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தனியார் ஒப்பந்தக்காரர்களால் தொழிலாளர்கள் நசுக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கவும், அமைப்புச் சாரா தொழிலாளர்களை வரையறுக்கப்பட்ட அமைப்பின் கீழ் கொண்டுவரவும் ஒப்பந்த சேவை தொழிற்கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தற்போது 31 தொழிலாளர் ஒப்பந்தச் சேவை தொழிற்கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

மேலும் இதன் உறுப்பினர்களாகிய தொழிலாளர்களுக்குரிய சட்டப்பூர்வ சலுகைகளை உறுதி செய்து வருகின்றன. 2020-21ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.23,142.26 இலட்சம் அளவிற்கு சங்க உறுப்பினர்களுக்குக் ஊதியமாக வழங்கியுள்ளன.

### 2.12.14 ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்கு வழங்கிய ஆட்டோ கொள்முதல் கடனை தவணைகளில் வசூல் செய்தபின் அவர்களையே ஆட்டோ உரிமையாளர்களாக ஆக்கும் நோக்கத்துடனும் ஆட்டோ ஓட்டுநர்கள் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் 32 ஆட்டோ சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 15 ஆட்டோ சங்கங்கள் சிறுபான்மையினத்தைத் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு

சிறுபான்மையினர் மேம்பாட்டு கழக (டாம்கோ) திட்டத்தின் கீழ் ஆட்டோ ரிக்ஷாக்கள் சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள 4 ஆட்டோ தொழில் கூட்டுறவு சங்கங்கள் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களுடன் செயல்படுவதுடன் 2020−21ஆம் நிதியாண்டில் ரூ.3,760.64 இலட்சத்திற்கு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்துள்ளன.

### 2.12.15 சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு நிலையம் (மைகால்), சென்னை

சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு நிலையம் (மைகால்) தனது உறுப்பினர்களான மருந்து உற்பத்தி நிறுவனங்களின் மாதிரிகள்/உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்து அவற்றிற்கென நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் அளவீடுகளை ஆய்வு செய்து ஆய்வுச் சான்றிதழ்களை வழங்கி வருகிறது. உறுப்பினர் மருந்து நிறுவனங்கள்

சமர்ப்பிக்கும் மாதிரிகள் தவிர, உறுப்பினர்கள் அல்லாதவரும் சுங்கத்துறை மற்றும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் செயல்படும் அரசு சுகாதார துறைகளிடமிருந்து பெறப்படும் மாதிரிகளும் இங்கு சோதிக்கப்படுகின்றன. மருந்து தயாரிப்புகள் தவிர, உணவு கலப்படம் தடுப்புச் சட்டத்தின்படி உணவு பொருட்களை சோதனை செய்வதிலும் இச்சங்கம் ஈடுபட்டு வருகிறது. மைக்கால் சங்கத்தின் குன்னூர் பகுப்பாய்வு மையம் ஐ.எஸ்.ஓ (ISO) சான்றிதழ் பெற்றுள்ளது. 2020-21ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.30.47 இலட்சத்தினை சேவைக் கட்டணமாக ஈட்டியுள்ளது.

### 2.12.16 இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கம் 1979ஆம் ஆண்டு 345 உறுப்பினர்களுடன் ரூ.11.03 இலட்சம் பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 427 உறுப்பினர்கள் பாம்பு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சங்கம் பாம்புகளிடமிருந்து விஷத்தை எடுத்து ஆய்வு நிறுவனங்களுக்கும் மருந்தகத் தொழிலகங்களுக்கும் பாம்புக் கடி விஷ முறிவு மருந்தினை தயாரிக்க விற்பனை செய்து வருகிறது. இச்சங்கம் 2020–21–ஆம் ஆண்டில் ரூ.262.00 இலட்சம் விற்பனை செய்து, நிகர இலாபமாக ரூ.180.26 இலட்சம் (தணிக்கைக்கு முன்) ஈட்டியுள்ளது.

மேலும், இச்சங்கத்தின் செயல்பாடுகளை உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி சீர்படுத்திடவும், சங்கத்தில் விற்பனை செய்யப்படும் பாம்பு விஷத்தின் தரத்திற்கு பகுப்பாய்வு சான்று (Certificate of Analysis) பெற்றிடவும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஏற்படுத்திட உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.12.17 இதர தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தீப்பெட்டி, செங்கல், உலோகம், பாலித்தீன், கரி மற்றும் கல்கரி, தோல் பதனிடுதல் போன்ற சிறப்பு சேவை மற்றும் வணிகத்தில் 63 பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

## 2.13 நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள் (SDGs)

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியமானது, பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகிய பரிமாணங்களை கொண்ட 169 இலக்குகளுடன் ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றோடொன்று இணைந்த 17 இலட்சியங்களை கொண்டதாகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நீடித்த வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு, கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பொது சரக்குகள் மற்றும் சேவைகள் அளித்தல் மட்டுமல்லாமல் வறுமையை ஒழிப்பதிலும், சமத்துவத்தை

உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிலையான நீடித்த வளர்ச்சிக்கான இலட்சியம் 8ல் குறிப்பிடப்பட்டுள்ள நீடித்த பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான பணி ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஆக்க பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்கான குறியீடுகள் பின்வருமாறு,

- உத்யம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- ஒன்றிய அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- தமிழக அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை

## 2.14 தமிழ்நாடு அரசின் கோவிட்–19 நிவாரண நடவடிக்கைகள்

வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்த நிலையில் இருக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நோய் பரவலால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையை குறைப்பதற்கும், அவர்களுக்கு நிதி மற்றும் இதர உதவிகள் அளிப்பதற்கும் அறிவித்த நிவாரண நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

அ. இந்த நிதி ஆண்டிற்கான மூலதன மானியத்திற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.280 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் 60% (ரூ. 168 கோடி) தொகை உடனடியாக விடுவிக்கப்பட்டது

ஆ. மே 2021–ல் காலாவதியாகவுள்ள மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்புத் துறை, தொழிலாளர் துறை, தொழில் பாதுகாப்புத்துறை, வணிக உரிமம் உள்ளிட்ட அனைத்து சட்டப்பூர்வமான உரிமங்கள் புதுப்பிப்பதற்கான கால அவகாசம் டிசம்பர் 2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

இ. தொழில் விரிவாக்கத்தின் கீழ் மூலதன மானியம் பெறுவதற்கான விற்றுமுதல் 25% அதிகரிக்க வேண்டும் என்ற விதிமுறையில் இருந்து 31.03.2021 வரை அளிக்கப்பட்டிருந்த விலக்கு, தற்போது 31.12.2021 வரை மேலும் 9 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது

ஈ. தொழில் நுட்ப மேம்பாட்டிற்கான திட்டம் மற்றும் CGTMSE திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கு வழங்கப்படும்

5% பின்முனை வட்டி மானியம் உடனடியாக விடுவிக்கப்பட்டது.

உ. சிட்கோவின் மனை ஒதுக்கீட்டில் செலுத்த வேண்டிய தவணைத் தொகை, தவணைத் தொகை நிலுவை, வாடகை நிலுவை ஆகியவற்றை செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது

ஊ. சொந்த நிதி முதலீடு செய்து, மூலதன மானியம் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்கான முறை 3 தவணைகளுக்கு பதிலாக ஒரே தவணையில் வழங்கப்படுகிறது

எ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து கடன்

பெறுவதற்காக நிறைவேற்ற வேண்டிய பத்திரங்களை பதிவு செய்வதற்கான முத்திரை வரி கட்டணத்திற்கு 31.12.2021 வரை விலக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது

## 2.15 சிறப்பு முயற்சிகள்

### 2.15.1 மாநில கடன் உத்தரவாதத் திட்டம் மற்றும் கடன் மதிப்பீட்டு வரைமுறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு குறிப்பாக குறுந்தொழில் நிறுவனங்களுக்கு முறையான கடன் எளிதில் கிடைத்திடும் வகையில் மாநில அளவிலான கடன் உத்தரவாதத் திட்டம் கொண்டு வரப்படும். இந்நிறுவனங்கள் வணிகத் திறனின் அடிப்படையில் நிதி நிறுவனங்களும் நவீன நிதி தொழில்நுட்ப நிறுவனங்களும் கடன் வழங்கிட ஏதுவாக, மின்னணு தகவல் தரவுகள் அடிப்படையிலான கடன் மதிப்பீட்டு முறை ஏற்படுத்தப்படும்.

### 2.15.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் மறுசீரமைப்புத் திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் அவற்றிற்கு கடன் அளித்தவர்கள் தங்களது கடன்களை மறுகட்டமைப்பு செய்ய முன்வந்தால், அரசு கடன் உத்தரவாதத்துடன் நிதி நிறுவனங்களின் உதவியுடன் கடன் வழங்க ஓர் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 2.15.3 வர்த்தக வரவுகள் தள்ளுபடித் தளங்கள் (TReDS)

அனைத்து மாநில பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களை வர்த்தக வரவுகள் தள்ளுபடித் தளங்களின் கீழ் கொண்டு வந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களின் நிலுவைத் தொகைகளை விரைவாக வசூலிப்பதற்கான வழிவகைகள் உறுதி செய்யப்படும்.

# 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ)

தமிழ்நாடு அரசால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் சிறப்பு நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது.

## 3.1 தமிழ்நாடு சிட்கோவின் செயல்பாடுகள்

i. புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்

ii. அரசு மற்றும் தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளை நிர்வகித்தல்

iii. இயங்கி வரும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

iv. தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்

v. பொது வசதி மையம் மற்றும் பொது உற்பத்தி கட்டமைப்பு மையங்களை அமைப்பதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் குழுமங்களை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிட்கோ 122 தொழிற்பேட்டைகளை 8,260 ஏக்கர் பரப்பளவில் (41 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 81 சிட்கோ தொழிற்பேட்டைகள்) 14,195 மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் / தொழிற்கூடங்களை உருவாக்கி நிர்வகித்து வருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் சீரான தொழில் துறை சூழல் அமைப்பதற்கான தரமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் சாலைகள், மழை நீர் வடிகால், சிறு பாலங்கள், நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வசதி, தெரு விளக்குகள்,

பசுமை பகுதி, பூங்கா மற்றும் பிற வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்க முனைப்புடன் திட்டமிட்டுள்ளது. 122 தொழிற்பேட்டைகளின் விவரங்கள் இணைப்பு–2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.45 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.25.14 கோடி ஆகும். 2020–2021ஆம் நிதியாண்டில் ரூ.10.78 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

## 3.2 பிரத்யேக மகளிர் தொழிற்பூங்காக்கள்

தமிழ்நாடு சிட்கோ 5 மகளிர் தொழிற்பூங்காக்களை 1,226 தொழில்மனைகளுடன் கீழ்க்கண்ட இடங்களில் உருவாக்கியுள்ளது.

1. திருமுல்லைவாயில் (திருவள்ளூர் மாவட்டம்)
2. திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
3. கருப்பூர் (சேலம் மாவட்டம்)

4. வாழவந்தான்கோட்டை
(திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
5. கப்பலூர் (மதுரை மாவட்டம்)

## 3.3 ஒரேவகை பொருள் தயாரிப்பிற்கான தொழிற்பேட்டைகள்

தமிழ்நாடு சிட்கோ ஒரேவகை பொருள் தயாரிப்பிற்கான 5 தொழிற்பேட்டைகளை தொழில் மேம்பாட்டிற்காக 490 தொழில்மனைகள் மற்றும் 25 தொழிற்கூடங்களுடன் உருவாக்கியுள்ளது. விவரம் பின்வருமாறு:

1. ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஜவுளி பூங்கா, தண்டரை (செங்கல்பட்டு மாவட்டம்)
2. ஒருங்கிணைந்த ஆயத்த ஆடை/ஜவுளி பூங்கா, புஞ்சைகாளக்குறிச்சி (கரூர் மாவட்டம்)
3. ஒருங்கிணைந்த உணவு பூங்கா, ஈச்சம்பாடி (தருமபுரி மாவட்டம்)

4. ஒருங்கிணைந்த கடல்சார் உணவு பூங்கா, சக்கரைக்கோட்டை (இராமநாதபுரம் மாவட்டம்)
5. மருந்து பொருட்கள் பூங்கா, ஆலத்தூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

## 3.4 உருவாக்கத்தில் உள்ள புதிய தொழிற்பேட்டைகள்

தமிழ்நாடு சிட்கோ ரூ.225 கோடி மதிப்பில் 8 புதிய தொழிற்பேட்டைகளை கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் உருவாக்கி வருகிறது.

| வ. எண் | தொழிற் பேட்டையின் பெயர் | மாவட்டம் | நிலப் பரப்பு (ஏக்கரில்) | மேம்படுத்தப் பட உள்ள தொழில் மனைகளின் எண்ணிக் கை | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | ஆலத்தூர் பகுதி-2 | செங்கல்பட்டு | 70.31 | 193 | 135.07 |
| 2 | இராசம்பாளையம் | நாமக்கல் | 36.80 | 106 | 9.88 |
| 3 | உமையாள்புரம் | சேலம் | 20.07 | 62 | 4.50 |
| 4 | பெரியசீரகப்பாடி | சேலம் | 56.81 | 79 | 25.72 |
| 5 | ஆலங்குடி | புதுக்கோட்டை | 36.45 | 103 | 12.41 |
| 6 | பெரியகோளப்பாடி | திருவண்ணாமலை | 57.18 | 164 | 11.83 |
| 7 | ஆர். கோம்பை | திண்டுக்கல் | 54.00 | 160 | 18.90 |
| 8 | புலுவப்பட்டி | கோயம்புத்தூர் | 11.00 | 44 | 6.69 |
| | | **மொத்தம்** | **342.62** | **911** | **225.00** |

## 3.5 இயங்கி வரும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிட்கோ இயங்கி வரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மொத்த திட்ட மதிப்பில் ஒன்றிய அரசின் 60 விழுக்காடு மானியம் மற்றும் மாநில அரசின் 30% மானியத்துடன் செயல்படுத்தி வருவதில் இதுவரை 14 திட்டங்களை ரூ.29.64 கோடி மதிப்பில் நிறைவேற்றியுள்ளது.

கீழ்க்கண்ட 6 மாவட்டங்களில் அமையப்பெற்ற 7 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.37.50 கோடி மதிப்பில் மேம்படுத்தும் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | கே. புதூர் | மதுரை | 56.05 |
| 2 | நாஞ்சிக்கோட்டை | தஞ்சாவூர் | 26.30 |
| 3 | இராணிப்பேட்டை | வேலூர் | 113.44 |
| 4 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 39.90 |

| | | | |
|---|---|---|---|
| 5 | நஞ்சை ஊத்துக்குளி | ஈரோடு | 13.05 |
| 6 | ஓசூர் (புதியது) | கிருஷ்ணகிரி | 18.80 |
| 7 | உரங்கான்பட்டி | மதுரை | 70.10 |
| | | **மொத்தம்** | **337.64** |

## 3.6 தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

நகருக்கு வெளியே புதிய தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்க முன்வரும் தொழில் முனைவோர் கூட்டமைப்பிற்கு மொத்த திட்ட மதிப்பில் 50% என்ற அளவில் அதிகபட்சம் ரூ.10 கோடி வரையிலான தமிழ்நாடு அரசின் மானியத்துடன் அமைக்க தமிழ்நாடு சிட்கோ உதவி வருகிறது. இத்திட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், மோப்பிரிப்பாளையம் கிராமத்தில் ரூ.24.32 கோடி திட்ட மதிப்பில் 120 தொழில்மனைகளுடன் ஒரு தனியார் தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்திற்கான அதிகபட்ச மானியத்தொகை ரூ.15 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

ரூ.16.83 கோடி மாநில அரசு மானியத்துடன் ரூ.33.65 கோடி மொத்த திட்ட மதிப்பில் பின்வரும் 2 தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்கும் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

| வ. எண் | தனியார் தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | தி/ள். மதுரை பொறியியல் குழுமம் (பி) லிமிடெட், மேலவளவு | மதுரை | 54.00 | 13.65 |
| 2 | தி/ள். கொடீசியா இண்டஸ்டிரியல் பார்க் (பி) லிமிடெட், கள்ளப்பாளையம் | கோயம்புத்தூர் | 116.24 | 20.00 |
| | **மொத்தம்** | | **170.24** | **33.65** |

## 3.7 இயங்கி வரும் தனியார் தொழிற்கூடங்களை நகருக்கு வெளியே இடம் மாற்றி அமைத்தல்

இயங்கி வரும் தனியார் தொழிற்கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க மொத்த திட்ட மதிப்பில் 75% என்ற அளவில் அதிகபட்சம் ரூ.15 கோடி வரையிலான தமிழ்நாடு அரசின் மானியத்துடன் அமைக்க தமிழ்நாடு சிட்கோ உதவி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கனரக வாகன கட்டமைப்பு

தொழிற்பேட்டை நாமக்கல் மாவட்டம், வெள்ளகவுண்டன்பட்டியில் ரூ.13.67 கோடி மொத்த திட்டமதிப்பில் 300 தொழில் மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்திற்கான அதிகபட்ச மானியத்தொகை ரூ.20 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ரூ.13.63 கோடி மாநில அரசு மானியத்துடன் ரூ.18.17 கோடி மொத்த திட்ட மதிப்பில் பின்வரும் 2 தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்கும் திட்டப்பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

| வ. எண் | தனியார் தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | தி/ள். சதர்ன் டிஸ்டிரிக்ட் டெக்ஸ்டைல் பிராஸஸிங் குழுமம், காரியப்பட்டி | விருதுநகர் | 100.46 |
| 2 | தி/ள். டீ பார்க் இந்தியா (பி) லிமிடெட், சிறுமுகை, மேட்டுப்பாளையம் | கோயம்புத்தூர் | 13.45 |
| | **மொத்தம்** | | **113.91** |

## 3.8 அடுக்குமாடி தொழில் வளாகங்கள்

தமிழ்நாடு சிட்கோ திருமழிசை தொழிற்பேட்டையில் 97,036 சதுர அடி கட்டட பரப்பளவில் உடனடியாக தொழில் தொடங்க தேவையான வசதிகளுடன் 79 தொழிற்கூட அலகுகளை உள்ளடக்கிய அடுக்குமாடி தொழில் வளாகத்தினை அமைத்துள்ளது. இவற்றில் 40 தொழிற்கூட அலகுகள் மருந்து பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் உயிரி தொழில்நுட்பம் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும், உடனடியாக தொழில் துவங்க தேவையான வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டும் பணி கீழ்க்கண்ட இரண்டு தொழிற்பேட்டைகளில் நடைபெற்று வருகிறது.

(ரூ. கோடியில்)

| வ. எ ண் | தொழிற் பேட்டை | தளங்களின் எண்ணிக்கை | தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை | கட்டிட பரப்பு (சதுர அடியில்) | திட்ட மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | கிண்டி | தரைதளம் + 6 | 152 | 1,97,024 | 90.13 |
| 2 | அம்பத்தூர் | தரைதளம் + 4 | 100 | 1,36,136 | 60.55 |
| | **மொத்தம்** | | **252** | **3,33,160** | **150.68** |

## 3.9 ஒதுக்கீட்டு கொள்கை

காலியாகவுள்ள தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் குறித்த விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டு வெளிப்படையான முறையில் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 5 சென்ட் முதல் 100 சென்ட் பரப்பிலான தொழில்மனைகள், உற்பத்தி நிறுவனங்களின் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்வுக் குழுவினரால் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். தகுதியான விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை காலியாகவுள்ள தொழில்மனைகள் / தொழிற்கூடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கும்பட்சத்தில் குலுக்கல் முறையில்

(LoT system) ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது குலுக்கல் முறையில் கீழ்க்கண்ட புதிய நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன:

1. தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்பட்ட தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு குலுக்கல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் ஆகியன மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தப்படும்

2. மேற்படி தகுதியான விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் குலுக்கல் நடைபெறும்

3. குலுக்கல் நடைமுறை முழுவதும் ஒளிப்பதிவு செய்யப்படும்

4. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கான ஒதுக்கீட்டு ஆணை பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும்

5. தேர்வு செய்யப்படாத விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் தகவல் தெரிவிக்கப்படும்

தமிழ்நாடு சிட்கோ நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதிச்சுமையை குறைப்பதற்காக, தொழில்முனைவோரின் விருப்பத்தின் அடிப்படையில், குத்தகை அல்லது முழுக்கிரைய அடிப்படையிலான தொழில்மனைகளை பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. குத்தகை அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறையில், ஒதுக்கீடுதாரர், மனை மதிப்பில் 60% மட்டுமே முன்பணமாக செலுத்த வேண்டும். மீதமுள்ள 40% மனைமதிப்பினை 9% வட்டியுடன் 30 ஆண்டு வருடாந்திர தவணைகளில் செலுத்தலாம். 30 ஆண்டுகள் முடிவில் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி விற்பனை பத்திரம் வழங்கப்படும். முழுக்கிரைய விலை அடிப்படையில், ஒதுக்கீட்டுதாரர்கள் மனைத்தொகையில் 25 விழுக்காட்டினை ஒதுக்கீட்டு ஆணை நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள்ளும், மீதமுள்ள 75% மனைத்தொகையினை ஒதுக்கீட்டு

ஆணை நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள்ளும் செலுத்த வேண்டும்.

தமிழ்நாடு சிட்கோவின் தொழில்மனைகள் / தொழிற்கூடங்களை பெறுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் (Tamilnadu Industrial Investement Corporation Ltd – TIIC) தொழில் உட்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டத்தின் (Industrial Infrastucture Intiative Scheme – IIIS) மூலம் இடைக்கால கடன் வழங்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தியினை விரைந்து தொடங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 3.9.1 ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

தொழில்முனைவோருக்கு ஒதுக்கீட்டில் கீழ்க்காணுமாறு முன்னுரிமை வழங்கப்படுகிறது

- குறுந்தொழில் நிறுவனங்கள் – 30%
- மகளிர் தொழில்முனைவோர் – 30%

- முன்னாள் இராணுவத்தினர் – 10%
- பட்டியல் இனம்/பட்டியல் மற்றும் திருநங்கையர் – 20%
- நீட்ஸ் (NEEDS) திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## 3.10 பொது வசதி மையங்கள் அமைத்தல்

குழும மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களின் போட்டித்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டில் குழும அணுகுமுறை முக்கிய பங்காற்றி வருகிறது. ஒன்றிய அரசின் குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாடு, திறன் மேம்பாடு, சந்தை மற்றும் மூலதனத்திற்கான அணுகுமுறை

ஆகியவற்றிற்காக பொது வசதி மையங்களை (Common Facility Centres – CFCs) தமிழ்நாடு சிட்கோ உருவாக்கி வருகிறது.

**பொது வசதி மைய திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை**

(ரூ. கோடியில்)

| வ. எண் | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 26 | 141.34 | 97.39 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 16 | 198.59 | 130.83 |
| 3 | ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள திட்டங்கள் | 6 | 77.10 | 60.97 |
| | மொத்தம் | 48 | 417.03 | 289.19 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது வசதி மைய திட்டங்களின் விவரங்கள் முறையே **இணைப்பு–3, இணைப்பு–4 மற்றும் இணைப்பு–5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

## 3.11 பொது உற்பத்தி உட்கட்டமைப்பு

குறுந்தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் மாநில அரசினால் பொது உற்பத்தி

உட்கட்டமைப்புத் திட்டம் (Common Production Infrastucture – CPI) அறிமுகப்படுத்தப்பட்டு, குறுந்தொழில் குழுமங்களை ஊக்குவிக்கும் வகையில் மொத்த திட்ட மதிப்பில் 70 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சமாக ரூ.2.50 கோடி தமிழ்நாடு அரசின் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை**

(ரூ. கோடியில்)

| வ. எண் | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பு | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 1 | 3.90 | 2.50 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 6 | 25.27 | 13.21 |
| | மொத்தம் | 7 | 29.17 | 15.71 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் **இணைப்பு-6ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

## 3.12 மூலப்பொருட்கள் விநியோகம்

ஃபாரபின் மெழுகு மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகிய மூலப்பொருட்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தேவையின் அடிப்படையில் தமிழ்நாடு சிட்கோ கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. மேற்படி மூலப்பொருட்கள் அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், ஈரோடு, சிவகாசி மற்றும் சாத்தூர் ஆகிய 10 தமிழ்நாடு சிட்கோ கிளை அலுவலகங்கள் மற்றும் கிடங்குகள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன.

மூலப்பொருள் உதவித் திட்டத்தின் கீழ், 2020–21 நிதியாண்டில் தமிழ்நாடு சிட்கோ 1,407 மெட்ரிக் டன் அளவிலான ரூ.933 இலட்சம் மதிப்புடைய ஃபாரபின் மெழுகு மற்றும் காகிதம் ஆகிய மூலப்பொருட்களை விற்பனை செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில் 31.07.2021 வரை 129 மெட்ரிக் டன்

மூலப்பொருட்கள் ரூ.121 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 3.13 மின்னணு ஆளுமை

- தமிழ்நாடு சிட்கோ தனது வலைதளத்தினை (www.tansidco.tn.gov.in) உபயோகிப்பாளர்கள் எளிதில் பயன்படுத்தும் வகையிலும் மற்றும் தமிழ்நாடு சிட்கோவின் திட்டங்கள் மற்றும் பணிகளை தெரிந்து கொள்ளும் வகையிலும் மறுவடிவமைப்பு செய்துள்ளது.

- மேலும், தமிழ்நாடு சிட்கோ புதிய இணையமுகப்பு ஒன்றினையும் (www.tansidco.org) உருவாக்கி கீழ்க்கண்ட வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

  - ✓ காலி தொழில்மனைகளின் விவரங்களை இணையம் மூலம் பார்வையிடல்
  - ✓ இணைய வழி விண்ணப்பித்தல்

- ✓ இணைய வழி பண பரிவர்த்தனை மேற்கொள்ளுதல்
- ✓ குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம்

➢ தமிழ்நாடு சிட்கோவின் இணையம் "https://easybusiness.tn.gov.in/msme/" என்ற ஒற்றைச் சாளர இணையத்துடன் விரைவில் இணைக்கப்படும்.

## 3.14 புதிய முயற்சிகள்

### 3.14.1 பெருங்குழுமங்கள் உருவாக்குதல்

தமிழ்நாடு சிட்கோ மூலம் வளர்ந்து வரும் தொழில் துறைகளான மருந்து, பெட்ரோ இராசயனங்கள், துல்லியமான உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் விண்வெளி மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்து ஆகிய துறைகளில் ஐந்து பெருங்குழுமங்களுக்கான பொது வசதி மையங்கள் தலா ரூ.100 கோடி மதிப்பில் அமைக்கப்பட உள்ளன.

### 3.14.2 பணியாளர்கள் விடுதி

புலம் பெயர்ந்த பணியாளர்களுக்கு தரமான, பாதுகாப்பான, சுகாதாரமான தங்குமிடம் பணியிடப்பகுதியில் / அருகில் தேவைப்படுவதால், அவர்களின் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு தேவையான தொழிற்பேட்டைகளில் பணியாளர்கள் தங்கும் விடுதிகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது தொழில்முனைவோர் கூட்டமைப்புடன் இணைந்து கூட்டு முறையில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் குறைந்த வாடகை வீட்டு வளாகங்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ் (Affordable Rental Housing Complexes – ARHCs scheme) பெறப்படும் மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

### 3.14.3 இயங்கி வரும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

ஒரு சில தொழிற்பேட்டைகளை தவிர, இயங்கி வரும் தொழிற்பேட்டைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டினை தமிழ்நாடு சிட்கோ மேற்கொண்டு வருகிறது. 89 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசின் மானியம், தமிழ்நாடு சிட்கோவின் நிதி மற்றும் பயனாளர்களின் பங்களிப்பு தேவைப்படுகிறது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதியினை திரட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.14.4 விற்பனை செய்யப்படாத தொழில் மனைகள்

சில குறிப்பிட்ட தொழிற்பேட்டைகளில் தொழில்மனைகளின் மனைமதிப்பு அதிகமாக உள்ளதால், அவை விற்பனை செய்யப்படாமல் உள்ளன. எனவே, மனைமதிப்பினை தொழில்முனைவோர் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில்

மறுநிர்ணயம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.14.5 நில வங்கி மேம்பாடு

தேவையான இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்காக நில வங்கியினை மேம்படுத்துவது அவசியமாகிறது. அரசு புறம்போக்கு நிலங்கள், சிப்காட் நிறுவனத்திடமிருந்து 20 விழுக்காடு நிலம் பெறுதல், தனியார் நிலங்களை வாங்குதல் மற்றும் தனியார் நிலங்களை கையகப்படுத்துல் ஆகியவற்றின் மூலம் தகுதியான நிலங்கள் கண்டறியப்படும். பேச்சுவார்த்தை மூலம் தனியார் நிலம் கையகப்படுத்த தமிழ்நாடு சிட்கோவில் ஒரு தனி பிரிவு உருவாக்கப்படும். நடப்பாண்டில் ஐந்து புதிய தொழிற்பேட்டைகளுக்கான நில வங்கி 265 ஏக்கரில் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.14.6 தொழில்மனைகளுக்கான பட்டா

62 தொழிற்பேட்டைகளில் உள்ள 3,600 ஏக்கர் நிலத்தில் ஒதுக்கீடு பெற்ற தொழில்முனைவோருக்கு பட்டா வழங்கப்பட வேண்டும். இந்நிலங்களின் வகைப்பாடு அரசு புறம்போக்கு நிலம் என இருப்பதால், பட்டா பெற காலதாமதம் ஆகிறது. உரிய அலுவலர்கள் கொண்ட சிறப்புக்குழுவினை அமைத்து பட்டா பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965ஆம் வருடம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் டான்சிக்கு தற்போது கீழ்க்கண்டுள்ளவாறு 17 தொழிற்கூடங்களும் மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒரு காட்சியகமும் உள்ளது:

| | | |
|---|---|---|
| ➢ பொறியியல் தொழிற்கூடங்கள் | – | 3 |
| ➢ மர அறைகலன் தொழிற்கூடங்கள் | – | 12 |
| ➢ சிறப்பு வகை தொழிற்கூடங்கள் | – | 2 |
| மொத்தம் | – | 17 |

## 4.1 உற்பத்தி பொருட்கள்

டான்சி கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது:

1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள்

2. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்குத் தேவையான வகுப்பறை அறைகலன்கள்

3. வீடுகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கான அறைகலன்கள்

4. தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திற்கு (TNMSC) தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள்

5. இந்தியா மார்க்–II கைப்பம்புகள்

6. வர்ணங்கள், குழந்தைகள் எடை போடும் கருவி முதலியன

7. ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரெஞ்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசினி கரைசல்களான லைசால், பினாயில்.

## 4.2 2020–21ஆம் ஆண்டு முடிக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க பணி ஆணைகள்

- கல்லூரி கல்வி இயக்ககத்திற்குத் தேவையான எஃகு டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் ரூ.4.20 கோடி
- வேளாண் பொறியியல் துறைக்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.4 கோடி
- கால்நடை பராமரிப்பு துறைக்கு தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.1.80 கோடி
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.1.50 கோடி

**2021–22ஆம் நிதி ஆண்டில் 31.08.2021 வரை செய்து முடிக்கப்பெற்ற மற்றும் உற்பத்தியிலுள்ள குறிப்பிடத்தக்க பணி ஆணைகள்**

- பள்ளி கல்வி துறைக்குத் தேவையான Foundational Literacy and Numeracy (FLN) Kits ரூ.23.73 கோடி
- உயர்நீதி மன்றத்திற்கு தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.3.14 கோடி.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிக்கு தேவையான அறைகலன்கள் ரூ.2.90 கோடி
- சுகாதார மற்றும் குடும்ப நலத் துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.1.18 கோடி
- உயர் கல்வித் துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.0.60 கோடி
- வேளாண் துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.0.26 கோடி
- தொழில் துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.0.23 கோடி
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.0.20 கோடி

- தலைமைச் செயலகத்தில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் அலுவலகத்திற்கு தேவையான அறைகலன்கள் ரூ.0.35 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளது

## 4.3 தமிழ்நாடு வண்ணம் மற்றும் சார்பு பொருட்கள் நிறுவனம் (டாபப்) (டான்சியின் துணை நிறுவனம்)

இந்நிறுவனம் டான்சியின் முழு ஆளுமைப் பெற்ற துணை நிறுவனமாக வர்ணங்கள் மற்றும் அது சம்பந்தமான பொருட்களை தயாரித்து வழங்க தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் 18.11.1985 முதல் அம்பத்தூரில் அதன் பதிவுபெற்ற தலைமையிடத்தைக் கொண்டு உற்பத்தியை ஆரம்பித்தது. இதன் முக்கிய பணியானது பல்வேறு அரசு துறைகள், போக்குவரத்து கழகங்கள் மற்றும் தமிழக அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து குறியிடும் இரப்பர் கலந்த

வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருவதாகும்.

இந்நிறுவனம் ஐ.எஸ்.ஓ 9001:2015 தரச்சான்றிதழை பெற்றுள்ளது.

இந்நிறுவனத்தை டான்சியுடன் இணைப்பதற்கு அரசு ஆணை எண் 53, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (இ) துறை, நாள் 22.07.2020ல் ஆணை பிறப்பிக்கப்பெற்று அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

# 5. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN) தொழில்முனைவோருக்கு ஏற்ற தொழிற்சூழலை ஏற்படுத்த தேவையான பொறுப்பினை ஏற்றுள்ளது. இது 2001–இல் நிறுவப்பட்ட இலாப–நோக்கம்–அற்ற நிறுவனமாகும். தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், மாநிலத்தில் புத்தாக்கம் மற்றும் புத்தொழில் சூழலை மேம்படுத்துகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 2.85 இலட்சம் தொழில்முனைவோருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சி அளித்துள்ளது. மாணவர்கள், ஆர்வமுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர் மற்றும் புத்தொழிலுக்கு தேவையானவற்றை வழங்குகிறது.

இந்நிறுவனம், பல்வேறு பயிற்சி திட்டங்களை நடத்துகிறது மற்றும் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சங்கங்களுடன் இணைந்து பல்வேறு பயிற்சி திட்டங்களை நடத்துகிறது.

**நிர்வாகம்**

EDII–TN, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படுகிறது. இந்நிறுவனம் அரசின் பல்வேறு முக்கியத் துறை செயலர்கள் மற்றும் தொழிற்துறை உறுப்பினர்கள் உள்ளடக்கிய ஆளுகைக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் நிர்வாகம் மற்றும் கணக்குப் பிரிவுகளுடன் கீழ்க்கண்ட ஐந்து பயிற்சி திட்டப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அ) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள், ஆ) மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள், இ) புத்தாக்கம் மற்றும் தொழில் வளர்காப்பகங்கள்,

ஈ) தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பப் பிரிவு,
உ) நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு.

## 5.1 முக்கிய நடவடிக்கைகள்

இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகளான தொழில்முனைவு மற்றும் புத்தாக்க மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

### (அ) தொழில்முனைவோர் மேம்பாடு

NEEDS (15 நாட்கள்) மற்றும் UYEGP (7நாட்கள்) திட்ட பயனாளிகளுக்கான பயிற்சி, தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சிகள், குழுமத்தொழில் மேம்பாட்டு பயிற்சி, தொழில் வழிகாட்டுதல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மூலம் பயிற்சிகள் ஆகியவை தொழில்முனைவோர் மேம்பாட்டிற்காக வழங்கப்படுகின்றன.

**(ஆ) புத்தாக்க மேம்பாடு**

புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்காக கல்வி நிறுவனங்களில் புத்தாக்க (ம) தொழில்முனைவு வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு வளர்காப்பக திட்டம், புத்தாக்க பற்றுச்சீட்டு திட்டம் மற்றும் பல்வேறு புத்தாக்க மேம்பாட்டு முயற்சிகள் ஆகியவை முக்கிய நடவடிக்கைகள் ஆகும்.

### 5.1.1 தொழில்முனைவோர் மேம்பாடு

இந்நிறுவனம் NEEDS, UYEGP போன்ற அரசின் மானிய கடன் திட்டங்களுக்கான பயிற்சி அளிக்கும் முதன்மை ஒருங்கிணைப்பு மையமாக விளங்குகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை தொடங்கி தொழில்முனைவோர் ஆக விரும்பும் இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில் திட்டவரைவு தயாரிக்க உதவி, நிதி நிறுவனங்களுடன் பிணைப்பை எற்படுத்துதல் ஆகியவற்றை செய்து தங்களின் உற்பத்தி மற்றும்

சேவை நிறுவனங்களை அரசின் பல்வேறு மானியத் திட்டங்களின் மூலம் துவங்க உதவியளிக்கப்படுகிறது. மாவட்டத் தொழில் மையத்தால் தேர்ந்தெடுக்கப்படும் இப்பயனாளிகளுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### (i) தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சிகள்

தொழில் புரிபவர்களின் பல்வேறு நிலைகளுக்கு ஏற்ற பயிற்சி தேவையை கருத்தில் கொண்டு, புத்தாக்கம் சார்ந்த மற்றும் பிற தொழில்முனைவோருக்கு பல்வேறு வகையான பயிற்சி திட்டங்கள் மற்றும் சேவைகளை EDII–TN வழங்கிவருகிறது. தொழில்முனைவோருக்கு பயிற்சிகள், பட்டறைகள், வழிகாட்டுதல் சேவைகள், தொழில் சம்பந்தமான சந்திப்புகளுக்கான வாய்ப்புகள், கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மற்றும் மாநிலத்தின் பிறபகுதிகளிலும் மற்றும் வெளியிலும்

கற்றுத் தெரிதலுக்கான வாய்ப்புகள் போன்றவற்றை இந்நிறுவனம் வழங்கிவருகிறது.

2020–21ஆம் ஆண்டில் மொத்தம் 6,731 ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே தொழில் புரிந்துவருபவர்கள், நான்கு கட்டங்களாக பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மூலம் பயனடைந்தனர். அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அ) முதல் கட்டம் (கருத்துரு நிலை)**–இக்கட்டத்தில் ஒரு நாள் பயிற்சியாக தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, தொழிலை எவ்வாறு தொடங்குவது, தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்துவது மற்றும் பல்வேறு அரசு திட்டங்கள் பற்றிய தகவல்கள் போன்றவை தொழில்முனைவோருக்கு எடுத்துரைக்கப்படுகிறது. இம்முகாம்கள் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சங்கங்களுடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. 2020–21ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 59 இடங்களில் தொழில்முனைவோர்

விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 3,991 தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்று பயன்பெற்றனர். 2021-22இல் விழிப்புணர்வு முகாம்களின் மூலம் 15,000 நபர்களை பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆ) இரண்டாம் கட்டம் (தொழில் திட்டமிடல் நிலை) –** இக்கட்டத்தில் தொழில்முனைதலில் ஆர்வம் கொண்டு தொழில் துவங்க விரும்பும் ஆர்வலர்களுக்கு தொழில் வணிக மாதிரி வடிவம் மற்றும் திட்ட தயாரிப்பு பயிற்சிகள் வழங்கப்படும். பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் வணிக மாதிரியை உருவாக்குவது மற்றும் அவர்களின் வணிக திட்டங்களை சரிசெய்வது மற்றும் அரசாங்கத் திட்டங்களின் கீழ் பல்வேறு தொழில் கடன்களுக்கான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதற்கான வழிமுறைகள் பயிற்றுவிக்கப்படுகிறது. 2020-21 ஆம் ஆண்டில் ஐந்து தொழில் மாதிரி மற்றும் தொழில் திட்டம் தயாரிப்பதற்கான பயிற்சியில் 152 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். 2021-22ஆம்

ஆண்டில் 1,650 நபர்களுக்கு தொழில் மாதிரி மற்றும் தொழில் திட்டம் தயாரிப்பதற்கான பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**இ) மூன்றாவது கட்டம் (தொழில் தொடங்கும் நிலை) –** இக்கட்டத்தில் UYEGP, NEEDS போன்ற பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் தொழிற்கடன் அனுமதி பெற்றவர்களுக்கும் பொதுப்படையான பிற தொழில் ஆர்வலர்களுக்கும் முறையே 7 நாட்கள் மற்றும் 15 நாட்கள் என்ற அளவில் தொழில்முனைவு மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் தொழிலை எவ்வாறு தொடங்குவது, சந்தை நிலையை புரிந்துகொள்ளுதல், சட்டரீதியான வணிக தேவைகள், செயல்முறை மேலாண்மை திட்டங்கள் போன்றவை எடுத்துரைக்கப்படுகிறது.

கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக நேரடி பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. NEEDS, UYEGP போன்ற பயிற்சிகளை இணைய

வழியில் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான திட்ட மாதிரிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2021–22ஆம் ஆண்டில் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3,600 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ) நான்காம் கட்டம் (ஏற்கனவே தொழில் புரிவோருக்கானது)** – இக்கட்டத்தில் தொழில்கள் புரிவதில் அன்றாடம் சந்திக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான சமகால தலைப்புகளின் கீழ் பயிற்சிகள் வழங்குதல் போன்றவை மேற்கொள்ளப்படுகிறது. இப்பயிற்சிக்கான கால அளவு அரைநாள் முதல் 3 நாட்கள் வரை மாறுபடும். 2020–21ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு:

- நிதி மேலாண்மை
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் வியாபார யுக்திகள்
- உற்பத்தி மற்றும் மனிதவளம் மேலாண்மை
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றிய விவரங்கள் மற்றும் ஆவணப்படுத்துதல் (அடிப்படை மற்றும் உயர் நிலை)
- துணிகர மூலதனம் (Venture Capital)
- எளிமையான உற்பத்தி (Lean Manufacturing)
- சரக்குகள் மற்றும் சேவை வரி (GST), மின் வழி ரசீது (E–way bill) மற்றும் வருமான வரி தாக்கல்
- மாற்று எரிசக்திக்கான விழிப்புணர்வு முகாம்

2021–22ஆம் ஆண்டு 3,940 தொழில்முனைவோருக்கு நான்காம் கட்டத்தின் கீழ் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## (ii) குழுமத்தொழில் மேம்பாட்டுத் திட்டம்

பல்வேறு குழுமத்தொழில் முன்னேற்றத்திற்காக, புதிய குழுமங்களை கண்டறிதல், குழுமங்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள், கருத்துப் பட்டறைகள், ஏற்கனவே உள்ள குழுமங்களுக்குத் தேவையின் அடிப்படையில் நடப்புத் தலைப்பில் கருத்துப் பட்டறைகள், குழும களவெளிப்பாட்டுப் பயணங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை EDII-TN மேற்கொள்கிறது. 2020-21ஆம் ஆண்டில், குறு மற்றும் பாரம்பரிய குழுமத்தொழில்களுக்கான விழிப்புணர்வு கூட்டங்கள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டுள்ளன. ஒன்பது தொழில் குழுமங்களுக்கான விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டதில் 447 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர் பங்குபெற்று பயனடைந்தனர். சிறப்பாக நடைபெறும் தொழில் குழுமங்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப நடப்புத் தலைப்புகளில் 3 கருத்துப் பட்டறைகள் பல்வேறு இடங்களில்

நடத்தப்பட்டன. இதில் 163 தொழில்குழும உறுப்பினர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

2021-22ஆம் ஆண்டில் 1,500 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு குழுமத்தொழில் மேம்பாட்டு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) தொழில் வழிகாட்டுதல் திட்டம்**

ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே தொழில் புரிந்துவரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோரின் நீடித்த வளர்ச்சிக்காக, வழிகாட்டுதல் சேவைகள் பல்வேறு நிலைகளில் அளிக்கப்படுகின்றன. சிறந்த தொழில்முனைவோர், தொழில்முறை வழிகாட்டிகள், கள நிபுணர்கள் போன்றவர்களை வழிகாட்டிகளாக ஈடுபடுத்தி தொழில்முனைவோரின் இலக்குகளை செயல்வடிவமாக்க EDII-TN உதவுகிறது. வணிக சேவை திட்டத்தின் கீழ் 2020-21ஆம் ஆண்டில் 1,012 புதிய மற்றும் ஏற்கனவே தொழில்புரிந்து கொண்டிருக்கும்

தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல் சேவை வழங்கப்பட்டது. மேலும் 699 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடையே பிணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டில் சுமார் 2,500 நபர்களுக்கு வழிகாட்டுதல் சேவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.1.2 தகவல் தொழில்நுட்பம் மூலம் தொழில்முனைவோர் மேம்பாடு

**அ) பெருந்திரள் தகவல் பரவலாக்கும் திட்டம்**

இந்நிறுவனத்தின் தகவல் பரவலாக்கும் திட்டத்தின் கீழ், அகில இந்திய வானொலியின் ரெயின்போ பண்பலையில் 'தொழிலும் வாழ்வும்' என்னும் தலைப்பில் நிகழ்ச்சி தொடர்ச்சியாக ஒலிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில் வாய்ப்புகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அரசு திட்டங்கள், வழிகாட்டுதல்

சேவைகள் போன்றவை குறித்து பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. 27 ஒலிபரப்புகள் 2020-21இல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதிகை தொலைக்காட்சியில் 'நிமிர்ந்து நில்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக நிகழ்சிகள் ஒளிபரப்பப்படுகிறது. 2020-21ஆம் ஆண்டில் நான்கு ஒளிபரப்புகள் நிறைவடைந்துள்ளன.

2021-22ஆம் ஆண்டில் 48 தொலைக்காட்சி ஒளிபரப்புகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**ஆ) கண்காட்சிகளில் பங்கேற்றல்**

தேசிய மற்றும் மாநில அளவில் நடைபெறும் தொழில் கண்காட்சிகளில் தொழில்முனைவோர் அவர்களின் புத்தாக்க பொருட்களை / தொழில்நுட்பங்களை சந்தைப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப செயல் விளக்கத்திற்கும் இந்நிறுவனம் உதவிவருகிறது. 2020-21ஆம் ஆண்டில் CII TN MSME SUMMIT மற்றும் TiECON என இரண்டு இணைய வழி

தொழில் கண்காட்சிகளில் இந்நிறுவனம் பங்குபெற்றது.

## இ) ஆவணப்படுத்துதல்

- **காட்சி ஆவணப்படுத்துதல்**: காட்சி ஆவணப்படுத்துதல் முறையில் NEEDS, UYEGP திட்டங்களின் மூலம் இந்நிறுவனத்தில் பயிற்சிபெற்ற வெற்றிகரமான 21 தொழில்முனைவோர்களின் வெற்றிக்கதைகள் ஆவணப்படுத்தப்பட்டன.

2021–22ஆம் ஆண்டில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட 50 தொழில்முனைவோரின் வெற்றிக்கதைகளை காட்சி ஆவணப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**மின்னணு செய்திமடல்**: EDII–TNஇன் செயல்பாடுகள், MSMEக்கு தேவையான அம்சங்கள், திட்டங்கள், தொழில் சம்பந்தமான அரசின் பல்வேறு அறிவிப்புகள் போன்றவற்றை

உள்ளடக்கிய மாதாந்திர மின்னணு செய்திமடல் வெளியிடப்பட்டு வருகிறது. இச்செய்திமடல், பயிற்சி பெற்றோர், பங்குதாரர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சங்கங்கள், தொழில்சார் துறைகள் ஆகியோருக்கு அனுப்பப்படுகிறது.

**ஈ) மின்கற்றல் (E-Learning)**

மின்கற்றல் முறையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோருக்கு தேவையான பல்வேறு தலைப்புகளில் பதிவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக EDII–TNஇன் இணையதளத்தில் பதிவேற்றப்படுகிறது. 2020–21ஆம் ஆண்டில் பல்வேறு தலைப்புகளில் 17 மின்கற்றல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2021–22இல் 24 மின்கற்றல்கள் உருவாக்கப்பட்டு பதிவேற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**உ) அழைப்பு மையம் (Call Centre)**

தொழில் ஆர்வலர்கள், ஏற்கெனவே தொழில் செய்து கொண்டிருப்பவர்கள், புத்தொழில்முனைவோர், குழுமங்கள், ஆகியோருக்கான தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கான தகவல்களை அளிக்கவும் அவர்களின் சந்தேகங்களை தீர்க்கும் பொருட்டும் ஒரு அழைப்பு மையம் இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு முழுநேர அலுவலர் நியமிக்கப்பட்டு, இம்மையம் மூலம் தொழில் சம்பந்தமான சந்தேகங்கள், வழிகாட்டுதல்கள், கேள்விக்கான பதில்கள் ஆகியவை ஒரு வழிகாட்டுதல் அணுகுமுறை மூலம் அளிக்கப்படுகிறது.

## 5.1.3 புத்தாக்க மேம்பாடு

EDII-TN, கல்வி நிலையங்களில் தொழில்முனைதல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்து மாணவர்களை வேலை தேடுபவராக

இல்லாமல் வேலை கொடுப்பவர்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

**(i) கல்வி நிறுவனங்களில் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டம் (IEDP)**

இந்நிறுவனம், கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி மையங்களுக்காக, இத்திட்டத்தினை 2016–17ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்காக பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டம், மையம் (Hub) மற்றும் உறுப்புக் கல்லூரிகள் (Spoke Colleges) என்ற அணுகுமுறையில் கீழ்கண்ட 3 முக்கிய நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- கல்லூரிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க சூழல் மேம்பாடு.

- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொழில்முனைவோர் திறன் மேம்பாடு.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தாக்க ஊக்குவிப்பு.

**(ii) கல்லூரிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க சூழல் மேம்பாடு**

உயர்கல்வி நிறுவனங்களில், தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க சூழலை மேம்படுத்துவதற்காக, EDII-TN, உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் தொழில்முனைவோர் மையங்களை உருவாக்கவும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பிரத்யேக தொழில்முனைவோர் திட்டங்களை செயல்படுத்தவும் ஊக்குவிக்கிறது. இத்திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக, கீழ்கண்ட கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய முக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், 'மையங்களாக' அங்கீகரிக்கப்பட்டு, ஒவ்வொரு

மையமும் 30 முதல் 40 'உறுப்பு' கல்லூரிகளை ஒருங்கிணைக்கின்றன. இதுவரை, மாநிலத்தில் 17 மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் சென்னை, விழுப்புரம், ஆரணி, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, காரைக்குடி, திருநெல்வேலி, மற்றும் நாகர்கோவில், ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. இதுவரை 638 கல்வி நிறுவனங்கள் உறுப்பு கல்லூரிகளாக இத்திட்டத்தின் கீழ் இணைந்துள்ளன.

மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக மாணவர் தொழில்முனைவோர் மையங்கள் (E-Cells) உறுப்பு கல்லூரிகளில் ஏற்படுத்திட ஊக்குவிக்கப்படுகிறது. இதுவரை 330 கல்லூரிகள் மாணவர் தொழில்முனைவோர் மையங்களை தங்களின் கல்லூரிகளில் உருவாக்கி உள்ளனர்.

**(iii) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொழில்முனைவோர் திறன் மேம்பாடு**

மாணவர்களுக்கான தொழில்முனைவோர் விழிப்புணர்வு, பயிற்சிகள் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு குறித்த சான்றிதழ் படிப்புகள், தொழில் திட்ட அறிக்கை மற்றும் தொழில் வணிகம் மாதிரி வடிவம் தயாரித்தல் குறித்த கருத்துப்பட்டறைகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ஆகியன ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் பின்வரும் செயல்பாடுகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

- இந்நிறுவனம், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து தொழில்முனைவோர் மேம்பாடு குறித்து ஆறுமாத கால மதிப்பீடு முறையிலான சான்றிதழ் படிப்பை நடத்துகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கற்கும் ஆர்வத்தை தூண்டும் வகையிலும், எளிதில் புரிந்துகொள்ளும்

வகையிலும், தனி இணைய வழியில் கற்றுக்கொள்ள ஏதுவாகவும் கனிணி வழி பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்காக வழங்கப்படும் இந்த பாடத்திட்டத்தில், தொழில்முனைதல் பற்றிய அடிப்படை, தொழில் நிறுவனங்களை தொடங்கவும் அதனை நிர்வகிக்கவும், மேலும் அதன் வளர்ச்சிக்கு தேவையான நிதி, சந்தைப்படுத்தல், திட்டமிடல், சட்ட அம்சங்கள், தலைமைத்துவம், செயல்பாடுகள் உட்பட்ட பல்வேறு திறன்வளர் பாடங்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது. 2020–21ஆம் ஆண்டில் இப்பாடத்திட்டத்தில் 8 உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து 480 மாணவர்கள் சேர்ந்ததில், 445 மாணவர்கள் தேர்ச்சி பெற்று இச்சான்றிதழ் படிப்பை நிறைவு செய்துள்ளனர்.

- கோவிட்–19 காலத்தில், 313 தொழில்முனைவோர் விழிப்புணர்வு மேம்பாடு

குறித்த இணையவழி முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் மாணவர் தொழில்முனைவோர் மையங்களிலிருந்து 21,457 மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

- கல்லூரிகளின் உயர்மட்ட நிர்வாகிகளுக்கான இரண்டு திட்டவிளக்க கூட்டங்கள் கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைகழகத்திலும் மற்றும் சேலத்தில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்திலும் நடைபெற்றன.
- நான்கு இடங்களில் ஆசிரியர்களுக்கான திறன்மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது. இதில் 145 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
- தொழில்முனைவோர் விழிப்புணர்வுக்கான நேரடி முகாம்கள் 20 உறுப்பு கல்லூரிகளில் நடத்தப்பட்டது. அதன் மூலம், 882 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

கல்வி நிலையங்களில் தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்த 2021–22ஆம் ஆண்டில் 30,000 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(iv) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தாக்க ஊக்குவிப்பு**

சமீப காலங்களில் இந்நிறுவனம் கல்வி நிறுவனங்களில் புத்தாக்கச் சூழலை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அறிவுசார் சொத்துரிமை மற்றும் தொழில்முனைதல் கருத்தரங்குகள், சிந்தனை வடிவமைப்பு, தொழிற்துறை கல்வி நிறுவனம் கூட்டமைப்பு முயற்சிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான புத்தாக்க சவால் போட்டிகள் ஆகியவை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனைகளை ஊக்குவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகின்றன. 2020–21ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- அறிவுசார் சொத்துரிமை மற்றும் தொழில்முனைதல் பயிற்சியை நிறைவு செய்த 251 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான தொடர் இணைய வழி பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர்கள் போட்டி (TNSI), இந்நிறுவனத்தால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர்கள் போட்டியில் வெற்றி பெறும் குழுக்களுக்கு தலா ரூ.10,000 முதல் ரூ.1 இலட்சம் வரையிலான ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு இதுவரை மொத்தமாக ரூ.26.50 இலட்சம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2021–22ஆம் ஆண்டில் 3,300 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு புத்தாக்க மேம்பாட்டு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.1.4 தமிழ்நாடு தொழில் வளர்காப்பகங்கள் உட்கட்டமைப்பு திட்டம்

தொழில்நுட்பங்கள் சார்ந்த தொழில்முனைதலுக்கு உத்வேகம் கொடுப்பது EDII-TNஇன் ஒரு முக்கிய நோக்கமாகும். தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் உற்பத்தி வணிக வளர்காப்பகங்களுக்கு தேவையான உட்கட்டமைப்புகள் ஏற்படுத்த ஒவ்வொரு காப்பகத்திற்கும் மூன்று வருட காலங்களில் அதிகபட்சமாக ரூ.2.5 கோடி தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. நிதியுதவி அளிப்பதுடன் வளர்காப்பகங்களை நிர்வகிக்கத் தேவையான சிறப்புத் திறன்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் வளர்காப்பக மேலாளர்களுக்கு சிறந்த வளர்காப்பக செயல்பாடுகள் பற்றி திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## தொழில் வளர்காப்பகங்கள் வாரியாக நிதி உதவி விவரம்

| வ. எண் | வளர்காப்பகத்தின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் வேளாண்– காடுகள் தொழில் வளர்காப்பக மையம், கோயம்புத்தூர் | 241.83 |
| 2 | கிள்ளிக்குளம் வேளாண் வணிக தொழில் வளர்காப்பக மையம், திருநெல்வேலி | 213.16 |
| 3 | பெரியகுளம் தோட்டக்கலை–வணிக தொழில் வளர்காப்பக மையம், தேனி | 214.50 |
| 4 | திருச்சிராப்பள்ளி வேளாண்–வணிக தொழில் வளர்காப்பக மையம், திருச்சிராப்பள்ளி | 239.38 |
| 5 | அண்ணாமலை புத்தாக்க மற்றும் தொழில் வளர்காப்பக ஆராய்ச்சி அறக்கட்டளை, கடலூர் | 234.07 |
| 6 | பெரியார் பல்கலைக்கழக வணிக தொழில் வளர்காப்பக கூட்டமைப்பு, சேலம் | 100.00 |
| 7 | கடல்சார் உணவுப் பொருட்கள் தொழில் வளர்காப்பக அமைப்பு, தூத்துக்குடி | 250.00 |
| 8 | கால்நடை அறிவியல் தொழில் வளர்காப்பக அமைப்பு, சென்னை | 235.00 |
| 9 | அண்ணா வணிக தொழில் வளர்காப்பக மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, திருச்சிராப்பள்ளி | 249.90 |
| | **மொத்தம்** | **1,977.84** |

### 5.1.5 புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டம் (IVP)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளும் புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆய்வுப் பணிகளுக்காக தேவையான நிதி உதவிகளை அளிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு "புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டம்" என்கிற புதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், அறிவு பங்குதாரர்களாக கல்வி நிலையங்கள், ஆய்வாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும்.

சர்வதேச அளவில் சிறந்த நடைமுறையில் முன்மாதிரி கொண்ட இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில்

தேவைகளுக்கான புதிய கண்டுபிடிப்புகளையும், புதிய பொருட்களையும் அறிவு பங்குதாரர் (Knowledge Partner) மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்குவதற்கு இரண்டு விதமான பற்றுச்சீட்டுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பற்றுச்சீட்டு 'A' மற்றும் பற்றுச்சீட்டு 'B' ஆகும்.

பற்றுச்சீட்டு 'A' இன் கீழ் புதிய பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கு முன் அதற்கான சந்தை தேவை, அவற்றின் உருவாக்கத்திற்கான ஆய்வு, திட்ட ஆய்விற்கான செலவினம், வடிவமைப்பு ஆய்வுகள் மற்றும் ஆரம்பக்கட்ட ஆய்வு போன்ற பணிகளுக்காக திட்ட செலவினத்தில் 80% அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். பற்றுச்சீட்டு 'B' யின் கீழ் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கும், புதிய வடிவமைப்பு மாதிரிகளை செய்வதற்கும் பொருள் சோதனை ஓட்டம், தரநிர்ணய சோதனை மதிப்பீடு மற்றும் சான்றிதழ் போன்ற செயல்பாடுகளுக்கு மொத்த செலவினத்தில் 50%

அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் விண்ணப்பதாரர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவைக்காக தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்க வேண்டும். ஆண்டு முழுவதும் விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக பெறப்பட்டு தொழில்நுட்பக் குழு மற்றும் வழிகாட்டும் குழு மூலமாக மாதந்தோறும் கூட்டங்கள் நடத்தி பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம், இதுவரை 105 கண்டுபிடிப்பாளர்கள் விவசாயம், சுகாதாரம், உற்பத்தி, உணவு தொழில்நுட்பம் போன்ற துறைகளிலிருந்து தேர்வுசெய்யப்பட்டு, அவர்களுக்கு மொத்தமாக ரூ.2.93 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2021–22ஆம் ஆண்டில் 200 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கண்டுபிடிப்பாளர்களுக்கு

இத்திட்டத்தின் கீழ் உதவியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.1.6 பிற புத்தாக்க மேம்பாட்டு நடவடிக்கைகள்

தொழில்நுட்ப வல்லுநர்கள், மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட நிதியுதவிகள் மூலம் புத்தாக்க மேம்பாடுகளை ஊக்குவிக்க EDII-TN முயற்சி எடுத்து கொண்டிருக்கிறது.

i) தமிழ்நாடு புத்தாக்க பெரும் சவால் போட்டி(TNIGC)

ii) தமிழ்நாடு இளம் கண்டுபிடிப்பாளர் போட்டி(TNIIC)

ஆர்வமுள்ள புத்தாக்க தொழில்முனைவோர் களிடையே போட்டிகளின் மூலம் நிதியுதவி அளித்து புத்தாக்கம் மற்றும் புத்தொழில் கலாச்சாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 'தமிழ்நாடு புத்தாக்க பெரும் சவால் போட்டி' (TNIGC) நடத்தப்படுகிறது. இந்த

போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படும் பங்கேற்பாளர்களுக்கு சவால்களை வெற்றிகரமான வாய்ப்புகளாக மாற்றுதல் குறித்த ஆய்வு, தொழில் எண்ணங்களை வெளிப்படுத்தும் போட்டி, சுருக்கமாக தங்களின் தொழில் சிந்தனைகளை எடுத்துரைத்தல், தொழில் வணிக மாதிரி வடிவம் மற்றும் திட்ட தயாரிப்பு, பொருளால் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் குறைந்தபட்ச பயன் ஆகியவை குறித்த பயிற்சிகள் தொடக்க முகாம்களில் (Boot camps) வழங்கப்படுகின்றன. இதன் இறுதியில் தேர்வாகும் பங்கேற்பாளர்கள்/ குழுக்கள் தங்களின் புத்தாக்க முயற்சிகளை முன்னெடுப்பதற்காக ஆதார மானியம் வழங்கப்படுகிறது.

# 6. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (M–TIPB)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (M–TIPB அமைப்பு), பன்னாட்டு தொழில் அமைப்புகளுடன் இணைந்து செயல்படவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவும் ஒரு தன்னாட்சி அமைப்பாக 2019இல் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஆதரித்து ஊக்குவிப்பதற்கான 'ஒற்றை முனையமாக' செயல்படவும், குறுந்தொழில் நிறுவனங்கள் சிறு நிறுவனங்களாகவும், சிறு நிறுவனங்கள் நடுத்தர நிறுவனங்களாகவும் வளர்ச்சி அடைய உதவுதற்காகவும் M–TIPB அமைப்பு உறுதி கொண்டுள்ளது. M–TIPB அமைப்பு ஐந்து வருட

தொலை நோக்குப்பார்வை பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:

## 6.1 தொலை நோக்குப்பார்வை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பானது, வர்த்தகம் மற்றும் பன்னாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு ஆகிய இரண்டு முக்கிய பகுதிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவி புரிகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான வர்த்தகம், மாநிலத்திற்குள்ளும், மாநிலத்திற்கு வெளியேயும் மற்றும் சர்வதேச அளவிலும், பொருட்களை வாங்குதல், விற்றல் மற்றும் சேவைகள் வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இன்றைய தொழில்நுட்பம் வளர்ந்த சூழலில் வர்த்தகம், இணையவழி மூலமாகவும் இணையவழி அல்லாத வழிகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. M–TIPB அமைப்பானது, இணையவழி மூலமாகவும்,

இணையவழி அல்லாத வழிகளிலும் சர்வதேச அளவில் தனக்கென ஒரு பங்கை வகிக்கும்.

**அ) இ–வணிகம் மூலம் சந்தை இணைப்புகள்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஏற்கனவே இருக்கும் சந்தைகள் மற்றும் புதிய சந்தைகளின் வாய்ப்புகளைத் தொடர்ந்து பெற வேண்டுமானால், இணையதள வழி வர்த்தகத்திற்கு மாற வேண்டும். M–TIPB அமைப்பானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை இணைய வழிப் பயன்பாடுகளில் ஈடுபடுத்த வழிகாட்டுகிறது. இதற்காக M–TIPB அமைப்பானது, B2B (Businees to Business) மற்றும் B2C (Business to Consumer) முறையில் இணைந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், இணைய வழியில் இயங்க உகந்த பாதையை வகுத்துக் கொடுக்கும்கிறது.

**ஆ) வாங்குபவர் – விற்பவர் சந்திப்புகள் மூலம் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுடன் (பொது துறை நிறுவனங்கள், அசல் உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவங்கள்) வர்த்தகத் தொடர்பு கொள்வது கடினம். இருப்பினும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெரும் தொழில் நிறுவனங்களுடன் வணிக தொடர்பு இல்லாமல் வளர்வதும் கடினம். எனவே, M–TIPB அமைப்பானது பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கிடையே வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்துவற்கு ஒரு முக்கிய தூண்டு காரணியாக செயல்பட முனைகிறது. M–TIPB அமைப்பானது, வாங்குபவர்–விற்பவர் கூட்டங்களை நடத்துவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிலை–III, நிலை–II, நிலை–I

விற்பனையாளராக வளரும் வாய்ப்பை உருவாக்குகிறது. தமிழகத்தில் பெரிய நிறுவனங்கள் சிறப்பான முறையில் செயல்பட துணை புரியும் தொழில்துறையின் 'தமிழ்நாடு தொழில் வழிகாட்டி' (Guidance TamilNadu) என்ற நிறுவனத்துடன் இணைந்து பெரிய நிறுவனங்களின் தேவைகளை அறிய உதவும். M–TIPB அமைப்பானது, Guidance TamilNadu நிறுவனத்துடன் இணைந்து, இப்பெரிய நிறுவனங்களின் தேவைகளை முன்னரே புரிந்துகொள்வதன் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் பெரிய நிறுவனங்களின் சந்திப்புகளைத் திட்டமிட்டு பெரு நிறுவனங்கள் கட்டமைக்கப்படும் நிலையிலும், செயல்பாடுகளைத் தொடங்கிய நிலையிலும், தமக்குத் தேவையான பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர்களாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மாற்ற உதவும். சிறந்த செயல்பாட்டினை உறுதி செய்ய, M–TIPB நிறுவனம்

துவக்கத்தில் ISO / தரச் சான்று பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், வாங்குபவர்–விற்பவர் கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றன. இந்த செயல்முறையானது, அவைகளின் தேவைகளைப் புரிந்துகொள்ளவும், புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட பட்டியலை அடையாளம் காணவும் உதவும் விதத்தில் சீரமைக்கப்படும்.

**இ) தேவை திரட்டுதல் (Demand Aggregation) மூலம் சந்தை வாய்ப்புகள்**

M–TIPB அமைப்பானது, தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில், இறக்குமதியின் அளவு மற்றும் இறக்குமதிகளை ஆய்வு செய்வதன் மூலம் இந்த

இறக்குமதியாளர்களை மாநில உற்பத்தியாளர்களுடன் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளம் காண்கிறது.

## ஈ) சந்தை இணைப்புகள்–தமிழ்நாட்டிற்கு வெளியே விற்பனை மற்றும் ஏற்றுமதி

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான வழிகளில் ஒன்று தமிழகத்திற்கு வெளியேயும் விற்பனை செய்வது ஆகும். இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் இந்தியாவில் உள்ள ஒரு பெரிய நடுத்தர வர்க்க வர்த்தக சந்தை, பன்னாட்டு நிறுவனங்ளை சார்ந்தே உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இந்த சந்தை வாய்ப்பில் பங்குபெற்று விற்பனையை மேம்படுத்த, M–TIPB அமைப்பு துணைபுரியும். இதற்ககாக, மின் வணிக நிறுவனங்களின் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளை பல

மாநிலங்களில் சந்தைப்படுத்த M–TIPB அமைப்பால் திட்டமிடப்பட்டுள்ளது.

இ–வழி பட்டியல் பகுப்பாய்வு மூலம், தயாரிப்பு உற்பத்தி மற்றும் நுகர்வு இடங்களை அடையாளம் காண முடியும். இந்தத் தரவைப் பயன்படுத்துவதன் மூலம், சில உற்பத்தித் தளங்களை தமிழகத்திற்கு கொண்டு வர தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகளை திட்டமிடலாம்.

குறிப்பிட்ட மாவட்டங்களில் இருந்து குறிப்பிட்ட உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதில் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. மேற்குறிப்பிட்ட பணியினை, M–TIPB அமைப்பு மூலம் விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உ) கொள்முதல் நிலையங்களின் கருத்தாக்கம்

ஜவுளி மற்றும் தோல் போன்ற சில துறைகளில் கொள்முதல் நிலையங்கள் (Buying Houses) நடைமுறையில் உள்ளன. பெரும்பாலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்துதல் ஒரு பெரும் சவாலாக உள்ளது. ஒவ்வொரு நிறுவனமும் தனக்கென ஒரு தனி சந்தைப்படுத்துதல் பிரிவினை ஏற்படுத்துவது, பொருளாதார ரீதியாக சாத்தியமற்றதாகும். எனவே, இதனை களைய M–TIPB அமைப்பானது கொள்முதல் நிலையங்கள் எனும் முறையை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது. இதன் மூலம், பல்வேறு சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களைப் தேவையான நுகர்வோர்கள் நேரடி கொள்முதல் செய்யும் இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன் அடையும்.

**ஊ) உலகளாவிய அனுபவம்**

பெரும்பாலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சர்வதேச அளவில் சிறப்பான நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. சர்வதேச கண்காட்சி, வர்த்தகம் மற்றும் சந்திப்புகள் மூலம், கற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தர M–TIPB அமைப்பு உத்தேசித்துள்ளது. இதன் மூலம், MSME நிறுவனங்கள் அதிக அளவில் பயன் பெரும் வகையில். தற்போது நடைமுறையில் உள்ள மானிய திட்டங்கள் மறு வடிவமைப்பு செய்யப்படும்.

**எ) முதலீட்டு அமைப்புகள் மற்றும் வர்த்தக மன்றங்களுடனான ஒத்துழைப்பு**

M–TIPB அமைப்பானது பன்னாட்டு வர்த்தக அமைப்புகள் மற்றும் முதலீட்டு அமைப்புகளுடன் இணைந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு, முதலீடு மற்றும் தொழில் நடத்த வாய்ப்புகளை ஏற்படுத்த உதவும். இந்த

முதலீடுகள் கூட்டு வர்த்தக வடிவத்திலும் இருக்கலாம் அதாவது, வெளிநாட்டில் இயங்கும் ஒரு தொழில் நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள நிறுவனத்தினை, ஒப்பந்த உற்பத்திப் பங்குதாரராகக் கொண்டு இணைந்து செயல்படலாம்.

**ஏ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகள்**

மேலே குறிப்பிட்டுள்ள உலகளாவிய வெளிப்பாடு உதவும்போது, புலம்–சார் தொழில்நுட்ப நிபுணத்துவமும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்த உதவும். M–TIPB அமைப்பானது தொழில்நுட்ப நிபுணர்களைக் கொண்டு உருவாக்கவுள்ள தளத்தின் மூலம், தங்கள் சேவைகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரு முன் மாதிரி அடிப்படையில், சில சர்வதேச நிபுணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிபுணத்துவத்தினைப் பகிர வைத்து, முன்னேற்றத்திற்கான சாத்தியங்களை வெளிப்படுத்திட முடியும். இந்த மேம்பாடுகள் மற்றவர்கள் பின்பற்றுவதற்கான அளவுகோல்களை அமைக்கும்.

**ஐ) பங்குதாரர்களுடன் பணிபுரிதல்**

தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் மாவட்ட, துறைவாரியான, தேசிய, சர்வதேச சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. M–TIPB நிறுவனம் மூலம் தொழில் நிறுவனங்களுக்கும் இந்த சங்கங்கங்களுக்கும் ஒரு தொடர்பை உருவாக்குவதன் மூலம், இந்த தொடர்பை மற்றும் உறவை வளர்ப்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். இதன் தாக்கத்தை நிறுவுதற்காக M–TIPB பிரிவு வாரியான கோரிக்கைகள், சிக்கல்களைப் பெற்று அவற்றைக் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையை வகுக்கும்.

## ஓ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிதி ஆதாரம் மிகப்பெரிய சவாலாக இருக்கும். சிக்கலைத் தீர்க்க முறையான தலையீடுகள் தேவைப்படுகின்றன. மேலும், M–TIPB அமைப்பானது, பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் அவற்றை TReDSஇல் இயக்குவதற்கு உதவி செய்யும். TReDSஇல் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில், பெரிய அளவிலான செயல்பாட்டு மூலதனம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களால் திரட்டப்படும். M–TIPB அமைப்பானது நேரடியாகவோ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு TReDSஇன் மூலம் கடன் வழங்க வழிவகை செய்யும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில், M–TIPB அமைப்பு, நிறுவனமானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவைகளான, சந்தைப்படுத்துதல்,

நிதி ஆதாரம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை பூர்த்தி செய்வதன் மூலம் வணிகம் செய்வதை எளிதாக்க முயல்கிறது. M–TIPB அமைப்பு தன்னை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு துடிப்பான செயல்பாட்டாளராகக் கருதுகிறது. M–TIPB அமைப்பு தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், சேவை வழங்குநர்கள், இணைய வழி சேவைகள், சர்வதேச இணைப்புகள் மற்றும் ஒரு பெரிய, வளர்ந்து வரும் தேசிய சந்தை ஆகியவற்றுடன் இணைப்புகள் மூலம் பயன்படுத்திக் கொள்ள இயலும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்தி படிப்படியாக செயல்படுத்தும்.

**ஓ) திருச்சிராப்பள்ளி–நாகப்பட்டினம் வேளாண் பெருந்தடம்**

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு இடையேயான பகுதிகளை

'வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக' அரசு அறிவித்துள்ளது. இப்பகுதிகளில் பல்வேறு வேளாண் சார்ந்த தொழில் நிறுவனங்கள் உருவாகுவதற்கு ஏதுவாக, ஏற்கனவே இயங்கி வரும் தொழிற்பேட்டைகளை மேம்படுத்தியும், புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியும், போக்குவரத்து வசதிகளை வலுப்படுத்தி சந்தைகள் மற்றும் துறைமுகங்களை இணைத்தும், அடிப்படை மின்சார வசதிகளை பெருக்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கையினை M–TIPB அமைப்பு தயார் செய்து வழங்கும்.

# 7. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM)

புத்தொழில்கள் மற்றும் புத்தாக்கங்களை வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே, மார்ச் 2021இல் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (டான்சிம்) தொடங்கப்பட்டது. புத்தாக்கம் மற்றும் புத்தொழில் முனைதலால், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்கும் ஒரு துடிப்பான புத்தாக்க சூழலை உருவாக்கி, ஆதரவு அளித்து, வளர்ப்பதே, டான்சிம்–ன் முக்கிய பணிகளாகும்.

மாநிலத்தில் தொழில் முனைதல் மற்றும் புத்தாக்கத்தினை துரிதப்படுத்துவதில் டான்சிம் நிறுவனம் கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

- புத்தாக்கங்கள் மற்றும் தொழில் முனைதலை ஊக்கப்படுத்துவதற்கு ஏற்ற ஒரு சூழலை உருவாக்குதல்
- புத்தொழில் சூழலுக்கு தேவையான வளங்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்
- நேர் மறையான சமூகநலத் தாக்கம் மற்றும் இணைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சமூகநல தொழில் முனைதலுக்கு ஆதரவு அளித்தல்
- சர்வதேச அளவிலான அணுகுமுறை, தொழில் இணைப்புகள் மற்றும் தொழில் ஒப்பந்தங்களை நிறுவுதல்

டான்சிம் – நிறுவனம், 'StartupTN' என்று அடையாளப்படுத்தப்படும்.

### அ. டான்சிம் இணைய முகப்பு

டான்சிம் இணைய முகப்பு (**www.startuptn.in**) கீழ்க்காணும் முக்கிய பணிகளை மேற்கொள்ள தொடங்கப்பட்டுள்ளது.

- புத்தொழில் மற்றும் புத்தாக்க பங்குதாரர்களை இணையவழி வாயிலாக பதிவு செய்து தேவையான வசதிகள் அளிப்பது.
- புத்தாக்கம் சார்ந்த அனைத்து திட்டங்கள், மானியங்கள் மற்றும் குறை தீர்க்கும் ஒரே மையமாக செயல்படுவது.
- டான்சிம் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் புத்தாக்க சுற்றுச்சூழலை இணைக்கும் ஒரு ஒருங்கிணைந்த தளத்தினை உருவாக்குவது.
- இணைய தள தரவின் ஆதாரமாக அமைந்து, அரசின் கொள்கை முடிவுகளுக்கு தேவையான தகவல்களை வழங்குவது.

StartupTN இணைய முகப்பில் பதிவு செய்யப்பட்ட அனைத்து புத்தாக்க நிறுவனங்களுக்கு தேவையான மென்பொருட்கள் (software) மற்றும் சேவைகள் அடங்கிய ஊக்கத் தொகுப்பினை (Booster Kits), பெரு நிறுவனங்களான Amazon Web Services, Freshworks, Microsoft மற்றும் Vakilsearch ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, இலவசமாகவும் மற்றும் குறைந்த விலையிலும் வழங்குதல்.

## ஆ. TANSEED திட்டம் – தமிழ்நாடு புத்தொழில் ஆதார மற்றும் இணையான ஆதார மானியம்

புத்தொழில் ஆதார மானிய திட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த புத்தொழில்களுக்கு ஆதார மானியமாக ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. சிறப்பான நிறுவனங்களுக்கு, இணையான ஆதார மானியம் (Matching Grant), ரூ.50 இலட்சம் வரையில் பெற, அவை பிற துணிகர மூலதன நிறுவனங்களில் இருந்து நிதி உதவி பெற வேண்டும். TANSEED திட்டத்தின் கீழ்,

ஹெட் ஸ்டார்ட் பவுண்டேஷன் (Head Start Foundation) என்ற நிறுவனத்துடன் இணைந்து, 2021 ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் 9 புத்தொழில் நிறுவனங்களுக்கு, தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், ரூ.45 இலட்சம் வழங்கப்பட்டது. TANSEED திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வானது, கடந்த 23.07.2021 அன்று துவங்கப்பட்டு, 20 வெற்றி பெறக்கூடிய புத்தொழில்களுக்கு, தலா ரூ.10 இலட்சம் வரை மானியமாக வழங்கப்பட இருக்கிறது.

**இ. தொழில் வளர் காப்பகங்களுக்கு உதவி (Support to Incubators)**

தமிழ்நாட்டில், உலகத்தரம் வாய்ந்த தொழில் வளர் காப்பகங்களின் கட்டமைப்பை உருவாக்கி, நிலையான மற்றும் முதலீட்டை ஈர்க்கும் சிறந்த புத்தாக்க நிறுவனங்களை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும். எனவே, தொழில் வளர் காப்பகங்களின் (Incubators) வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவி, வழிகாட்டுதல் மற்றும் திறன் மேம்பாட்டு உதவிகளை

வழங்குவது இந்நோக்கத்தை அடைய உதவும். டான்சிம் நிறுவனம் 'ஹெட் ஸ்டார்ட் பவுண்டேஷன்' (Head Start Foundation) நிறுவனத்துடன் இணைந்து தொழில் வளர் காப்பகங்களின் செயல்திறன் மேம்படுத்துதல் மற்றும் நிலையான வளர்ச்சியினை அடைய உதவி புரிகின்றன.

குறிப்பாக, தொழில் வளர் காப்பகங்களின் திறனை மேம்படுத்தும் திட்டம், துவக்க நிலையில் உள்ள தொழில் வளர் காப்பகங்களை ஆதரிப்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. உலகளவில் சிறந்த நடைமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், அவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பை வலுப்படுத்தவும் இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் 25 தொழில் வளர் காப்பகங்கள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலிருந்து, இரண்டாம் நிலை (Tier–II) மற்றும் மூன்றாம் நிலை (Tier–III) நகரங்கள் உட்பட தேர்வு செய்யப்பட்டு, 12 வார கால பயிற்சியில் பங்கு பெற்று பயன் பெற்றன. இந்த

பயிற்சியில் யோசனைகளை உருவாக்குதல், முதலீடுகள் பற்றி அறிமுகப்படுத்துதல், கொள்முதல் முறைகள், இணைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் திட்டங்கள், மானியங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி / மானியம் ஆகிய தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்த பயிற்சியின் மூலம் பங்குபெற்ற 25 தொழில் வளர் காப்பகங்களில், 12 தொழில் வளர் காப்பகங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.3.5 இலட்சம், மானியமாக வழங்கப்பட்டது.

**ஈ. தொழில் வளர் காப்பகங்களுக்கு சுழல் நிதி (TANSEED Incubator Revolving fund)**

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி, புத்தொழில்களுக்கு கருத்தாக்கம், மாதிரி வடிவங்களை அமைத்தல், முன்மாதிரி வடிவங்களை நிறுவுதல், சோதனை உற்பத்தி பொருட்கள், சந்தை நுழைவு மற்றும் வணிகப்படுத்தல் ஆகியவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள

தகுதியுள்ள புத்தொழில்களுக்கு, தகுதி வாய்ந்த தொழில் வளர் காப்பகங்கள் மூலம் ஆதார நிதி வழங்கப்படும். அது தொழில் நுட்பம் சார்ந்த தொழில் வளர் காப்பகங்களின் வளர்ச்சிக்காக, 1:3 (டான்சிட் ஆதார மானியம்:தொழில் வளர் காப்பக பங்கு) என்ற விகித அடிப்படையில், ரூ.50 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

### உ. பெரு நிறுவன புத்தாக்க திட்டம் (Corporate Innovation Programme)

டான்சிம் நிறுவனம், சிறந்த பெரு நிறுவனங்களோடு இணைந்து தமிழ்நாட்டில் உள்ள புத்தாக்க நிறுவனங்களின் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் திட்டத்தை தொடங்கவுள்ளது. புத்தொழில் நிறுவனங்கள், இத்திட்டத்தின் மூலம் பெரு நிறுவனங்களின் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன. குறிப்பாக, இத்திட்டம் இரு முறைகளில்

செயல்படுத்தப்படுகிறது. அதில் ஒன்று, புத்தொழில் நிறுவனங்கள் அவர்களது தீர்வுகளை தாமாக, பெரு நிறுவனங்களுக்கு வழங்க வாய்ப்பு அளிக்கிறது. மற்றொன்று, பெருநிறுவனங்கள் அவர்களது பிரச்சனைகளை பகிர்ந்து கொள்ளும் போது, புத்தொழில் நிறுவனங்கள் அதற்கான தீர்வுகளை கண்டுபிடிக்க வாய்ப்புகள் அமையும். டான்சிம் நிறுவனம், தொழில் கூட்டமைப்புகள் மற்றும் புத்தொழில் அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து பெரு நிறுவன புத்தாக்க திட்டத்தினை செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் செயல் விளக்க நாட்கள் (Demo days) மற்றும் விளக்க அமர்வுகள் (Pitching Sessions) நடத்துவதன் மூலம், புத்தொழில்கள் தங்களது பணிகளை பெரு நிறுவனங்களுக்கு காட்சிப்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஊ. புத்தொழில் நிறுவனங்களுக்கான வணிக துரிதப்படுத்துதல் திட்டம் (Business Accelerators)

பல்வேறு துறைகளை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களின் அடுத்த நிலை வளர்ச்சிக்கு உதவும் வகையில், தொழில் மற்றும் முதலீட்டு நிபுணர்களோடு இணைந்து இத்திட்டம், புத்தொழில் நிறுவனங்களுக்கான வணிக துரிதப்படுத்துபவர்களால் செயல்படுத்தப்படும். புத்தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், அவற்றின் முன்னேற்றத்திற்கு தேவையான உத்திகளை திட்டமிடவும், தேசிய மற்றும் உலகளாவிய நிறுவனங்களோடு இணைந்து, புத்தொழில் நிறுவனங்களுக்கான வணிக துரிதப்படுத்துதல் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் டான்சிம் நிறுவனம், தேசிய மற்றும் பெரு நிறுவனங்களை கண்டறிந்து அவற்றிற்கான வணிக துரிதப்படுத்துதல் நிகழ்ச்சிகளை தமிழ்நாட்டில் நடத்த உள்ளது.

## எ. அரசு நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள்

டான்சிம் நிறுவனம் மூலம், மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு புத்தொழில் சூழல், 'Startup India' கொள்கைகள் மற்றும் அரசு துறைகளில் சந்திக்கும் இடர்பாடுகளுக்கான தீர்வுகளை வழங்குவது குறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், தமிழ்நாட்டில் புத்தொழில் சூழலை வலுப்படுத்தும் நோக்கத்தோடு, பல்வேறு அரசு துறைகளால் பரிந்துரைக்கப்பட்ட பற்றாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம், புத்தொழில் முனைவோர்களுக்கு அரசு அதிகாரிகளுடன் இணைந்து ஒரு நீண்ட கால இணைப்பை ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு துறைகள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு புத்தொழில்கள் எவ்வாறு தீர்வுகள் அளிக்கும் என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## ஏ. புத்தொழில் நிறுவனங்களுக்கு, அரசு நிறுவன கொள்முதல்களில் சலுகைகள்

அரசின் புதிய அரசாணையில், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாட்டில் புத்தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும் வகையில் அரசுத் துறைகள், தமிழ்நாடு பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்றவை, பொருட்களை கொள்முதல் செய்யும்போது, ரூ.20 இலட்சம் வரைக்கான கொள்முதலுக்கு, முன் வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்தும், முந்தைய வருடங்களில் விற்று முதல் செய்திருக்க வேண்டும் என்ற விதியிலிருந்தும், முந்தைய விற்பனை அனுபவம் வேண்டும் என்ற விதியிலிருந்தும் ஒப்பந்த விண்ணப்பம் பெற கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

### ஐ. சமூக தாக்கம் மற்றும் முதலீடு (Social Impact Investing)

டான்சிம் நிறுவனமானது சமூகத்தில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய புத்தாக்கங்களை ஆதரிக்கும் எண்ணம் கொண்டுள்ளது. குறைந்த வருமானமுள்ள மக்களிடையே, புத்தாக்கங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி, தாக்க முதலீடுகளை (Impact investing) மையப்படுத்துதலில் கவனம் செலுத்தும். டான்சிம் நிறுவனம், மருத்துவம், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய பிரிவுகளில் புத்தாக்கங்களை உருவாக்கி வளர்ப்பதில் முனைந்திருக்கிறது.

### ஒ. தொழில் வழிகாட்டி இணைப்புத் திட்டம் (Mentor Connect Programme)

டான்சிம் நிறுவனம், MSMEx (இந்தியாவில் MSME, புத்தொழில் மற்றும் சிறு வணிகத்திற்கான கல்வி மற்றும் ஆலோசனை தளம்) நிறுவனத்துடன் இணைந்து 45 நாட்கள் கால அளவிலான 8 வணிக பயிற்சிகளை, புத்தாக்கங்களுக்கு வழங்க

உத்தேசித்துள்ளது. டான்சிம் நிறுவனமானது, தேசிய மற்றும் மண்டல அளவில் உள்ள வணிகம் மற்றும் பெரு நிறுவன (Corporate) தலைவர்களை, பிரிவு வாரியான வழிகாட்டிகளாக, StartupTN இணைய முகப்பில் உள்ளேற்றம் செய்ய தேவையான பணிகளை, தொழில் கூட்டமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

**தா. மோ. அன்பரசன்**
**அமைச்சர் (ஊரகத் தொழில்)**

## இணைப்பு – 1

## தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவு செய்த விவரம்

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | முதலீட்டு அளவு (ரூ. கோடியில்) | வேலைவாய்ப்பு (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| உத்யம் பதிவுச் சான்றிதழ்* 01.07.2020 முதல் | | | |
| 2020–21 (01.07.2020 – 31.03.2021) | 2,96,403 | 43,425.24 | 32,41,288 |
| 2021–22 (01.04.2021– 31.07.2021) | 1,04,976 | 10,376.50 | 9,28,064 |
| **மொத்தம்** | **4,01,379** | **53,801.74** | **41,69,352** |

*இந்திய அரசின் உத்யம் பதிவு இணையதளத்தின்படி உள்ள பதிவு விவரங்கள்

## இணைப்பு – 2

## தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தால் பராமரிக்கப்படும் 122 தொழிற்பேட்டைகள்

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2 | அரும்பாக்கம் | சிட்கோ | 1979 | 3.92 |
| | | 3 | வில்லிவாக்கம் | சிட்கோ | 1979 | 2.04 |
| | | 4 | கொடுங்கையூர் | சிட்கோ | 1979 | 7.88 |
| | | 5 | பெருங்குடி | அரசு | 1974 | 112.55 |
| | | 6 | திருவான்மியூர் | அரசு | 1967 | 28.91 |
| | | 7 | அம்பத்தூர் | அரசு | 1963 | 1167.00 |
| 2 | திருவள்ளூர் | 8 | காக்களூர் | அரசு | 1988 | 328.13 |
| | | 9 | திருமழிசை | சிட்கோ | 1988 | 160.85 |
| | | 10 | கும்மிடிபூண்டி | சிட்கோ | 1988 | 25.24 |
| | | 11 | ஆர்.கே.பேட்டை | சிட்கோ | 1996 | 8.15 |
| | | 12 | விச்சூர் | சிட்கோ | 1994 | 59.16 |
| | | 13 | திருமுல்லை வாயல் (ம.தொ.பூ) | சிட்கோ | 2001 | 246.07 |
| | | 14 | செங்கரை | சிட்கோ | 2017 | 36.25 |
| 3 | செங்கல்பட்டு | 15 | மறைமலைநகர் | சிட்கோ | 1981 | 39.50 |
| | | 16 | ஆலத்தூர் | சிட்கோ | 1984 | 150.00 |
| | | 17 | தண்டரை | சிட்கோ | 2017 | 44.30 |
| 4 | காஞ்சிபுரம் | 18 | காஞ்சிபுரம் | அரசு | 1968 | 37.95 |
| | | 19 | திருமுடிவாக்கம் முதன்மை) | சிட்கோ | 1993 | 201.11 |
| | | 20 | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 2013 | 5.262 |
| | | 21 | திருமுடிவாக்கம் (ம.தொ.பூ) | சிட்கோ | 2002 | 11.48 |
| | | 22 | திருமுடிவாக்கம் பகுதி–2 | சிட்கோ | 2017 | 22.44 |

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 5 | இராணிப்பேட்டை | 23 | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 24 | இராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 25 | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 26 | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 27 | முள்ளுவாடி & நாகலேரி | சிட்கோ | 2020 | 20.00 |
| 6 | திருப்பத்தூர் | 28 | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| | | 29 | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 30 | மின்னூர் | சிட்கோ | 2014 | 9.75 |
| 7 | வேலூர் | 31 | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| 8 | திருவண்ணாமலை | 32 | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |
| 9 | கிருஷ்ணகிரி | 33 | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 34 | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 35 | ஒசூர் | அரசு | 1974 | 12.34 |
| | | 36 | ஒசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |
| | | 37 | ஒசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 18.80 |
| | | 38 | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 39 | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 10 | தருமபுரி | 40 | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 41 | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 42 | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| | | 43 | ஈச்சம்பாடி | சிட்கோ | 2017 | 50.46 |
| 11 | சேலம் | 44 | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 45 | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 46 | கருப்பூர் (ம.தொ.பூ) | சிட்கோ | 2004 | 51.24 |
| | | 47 | வீரபாண்டி | சிட்கோ | 1993 | 9.79 |
| | | 48 | கோரணம்பட்டி | சிட்கோ | 2017 | 16.61 |
| | | 49 | சூரமங்கலம் | அரசு | 1986 | 27.5 |
| 12 | நாமக்கல் | 50 | நாமக்கல் | சிட்கோ | 1977 | 10.09 |
| | | 51 | திருச்செங்கோடு | சிட்கோ | 1980 | 9.18 |
| | | 52 | வேட்டம்பாடி | சிட்கோ | 2014 | 15.34 |

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 13 | ஈரோடு | 53 | ஈரோடு | அரசு | 1959 | 25.13 |
| | | 54 | நஞ்சை ஊத்துக்குளி | சிட்கோ | 1995 | 13.05 |
| | | 55 | பெருந்துறை | சிட்கோ | 2017 | 49.47 |
| 14 | கோயம்புத்தூர் | 56 | குறிச்சி | அரசு | 1972 | 88.43 |
| | | 57 | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | 1994 | 36.14 |
| | | 58 | காளப்பட்டி | அரசு | 1972 | 13.46 |
| 15 | திருப்பூர் | 59 | கணபதிபாளையம் | சிட்கோ | 1993 | 17.10 |
| | | 60 | திருப்பூர் | சிட்கோ | 1978 | 10.14 |
| | | 61 | குடிமங்கலம் | சிட்கோ | 1992 | 6.74 |
| | | 62 | இராசாத்தவலசு | சிட்கோ | 2011 | 51.80 |
| 16 | நீலகிரி | 63 | ஊட்டி | சிட்கோ | 1981 | 10.65 |
| 17 | கடலூர் | 64 | கடலூர் | அரசு | 1971 | 15.60 |
| | | 65 | வடலூர் | அரசு | 1972 | 26.22 |
| | | 66 | பெரியநெசலூர் | சிட்கோ | 2015 | 90.80 |
| | | 67 | விருதாச்சலம் | அரசு | 1961 | 41.53 |
| 18 | விழுப்புரம் | 68 | பட்டணம் | சிட்கோ | 2014 | 60.55 |
| | | 69 | வெண்மணியாத்தூர் | சிட்கோ | 2011 | 36.82 |
| 19 | கள்ளக்குறிச்சி | 70 | காட்டுவன்னஞ்சூர் | சிட்கோ | 2014 | 42.00 |
| | | 71 | ஆசனூர் பகுதி I&II | சிட்கோ | 2009<br>2015 | 212.83 |
| 20 | பெரம்பலூர் | 72 | எலம்பலூர் | சிட்கோ | 2009 | 44.48 |
| 21 | அரியலூர் | 73 | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| 22 | தஞ்சாவூர் | 74 | தஞ்சாவூர் | அரசு | 1968 | 21.94 |
| | | 75 | கும்பகோணம் | அரசு | 1968 | 32.30 |
| | | 76 | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |
| | | 77 | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 78 | பாளையப்பட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 23 | நாகப்பட்டினம் | 79 | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| 24 | மயிலாடுதுறை | 80 | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 25 | திருச்சி | 81 | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 82 | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 83 | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 84 | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 85 | வாழவந்தான் கோட்டை(ம.தொ.பூ) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 86 | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| 26 | கரூர் | 87 | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 88 | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| | | 89 | புஞ்சைகாளக் குறிச்சி | சிட்கோ | 2016 | 52.076 |
| 27 | புதுக்கோட்டை | 90 | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |
| | | 91 | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 1988 | 51.45 |
| | | 92 | மாத்தூர் | சிட்கோ | 1975 | 26.00 |
| | | 93 | மாத்தூர் (புதியது) | சிட்கோ | 2013 | 19.92 |
| 28 | தேனி | 94 | தேனி | அரசு | 1963 | 26.59 |
| | | 95 | ஆண்டிப்பட்டி | சிட்கோ | 1994 | 22.34 |
| | | 96 | மரிக்குண்டு | சிட்கோ | 2017 | 79.40 |
| 29 | திண்டுக்கல் | 97 | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.90 |
| | | 98 | வத்தலக்குண்டு | அரசு | 1965 | 16.26 |
| 30 | மதுரை | 99 | கே. புதூர் | அரசு | 1960 | 56.05 |
| | | 100 | கப்பலூர் | அரசு | 1966 | 534.64 |
| | | 101 | கப்பலூர் (ம.தொ. பூ) | சிட்கோ | 2008 | 37.00 |
| 31 | இராமநாதபுரம் | 102 | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 103 | கீழநாகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| | | 104 | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| | | 105 | சக்கரக்கோட்டை | சிட்கோ | 2017 | 100.00 |
| 32 | சிவகங்கை | 106 | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 107 | சிவகங்கை | அரசு | 1966 | 70.61 |
| | | 108 | கிருங்காக் கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| **33** | விருதுநகர் | **109** | விருதுநகர் | அரசு | 1958 | 41.13 |
| | | **110** | ராஜபாளையம் | சிட்கோ | 1995 | 40.95 |
| | | **111** | விருதுநகர் (நகர்புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| **34** | தென்காசி | **112** | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | **113** | குருக்கள்பட்டி | சிட்கோ | 2019 | 68.80 |
| **35** | திருநெல்வேலி | **114** | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | **115** | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| | | **116** | கங்கைகொண்டான் | சிட்கோ | 2020 | 89.92 |
| **36** | தூத்துக்குடி | **117** | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| | | **118** | தூத்துக்குடி–பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |
| | | **119** | தூத்துக்குடி–பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | **120** | பிடாநேரி | சிட்கோ | 2016 | 108.23 |
| **37** | கன்னியாகுமரி | **121** | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | **122** | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| | | | **மொத்தம்** | | | **8259.71** |

## இணைப்பு – 3

### ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 26 திட்டங்கள்

(ரூ. கோடியில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம்புத்தூர் | 2.88 | 0.99 | 0.17 | 1.73 | 0.00 |
| 2 | ஜவ்வரிசி குழுமம், சேலம் | 0.92 | 0.73 | 0.00 | 0.19 | 0.00 |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிபுத்தூர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|---|
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 8 | தீப்பெட்டிக் குழுமம், கோவில்பட்டி | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 9 | பீங்கான் குழுமம், விருதாச்சலம் | 0.83 | 0.43 | 0.10 | 0.18 | 0.11 |
| 10 | கயிறு குழுமம், சிவகங்கை | 6.59 | 5.00 | 0.66 | 0.93 | 0.00 |
| 11 | அரிசி ஆலைக்குழுமம், கீழப்பா வூர் | 6.91 | 4.66 | 0.69 | 1.46 | 0.10 |
| 12 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசுர் | 6.91 | 4.39 | 0.71 | 1.05 | 0.75 |
| 13 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 11.73 | 9.64 | 1.00 | 1.08 | 0.00 |
| 14 | அரிசி ஆலைக்குழுமம், ஆலங்குளம் | 7.87 | 5.50 | 0.79 | 0.84 | 0.74 |
| 15 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ் குழுமம், சேலம் | 16.33 | 12.78 | 1.00 | 2.55 | 0.00 |
| 16 | அரிசி மில் குழுமம், தஞ்சாவூர் | 2.12 | 1.00 | 0.40 | 0.21 | 0.50 |

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|---|
| 17 | பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம் | 14.85 | 10.27 | 1.00 | 2.58 | 1.00 |
| 18 | அச்சுக் குழுமம் சிவகாசி | 13.15 | 7.68 | 0.91 | 1.80 | 2.76 |
| 19 | தங்க நகைக் குழுமம், மதுரை | 3.56 | 2.56 | 0.29 | 0.40 | 0.31 |
| 20 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 4.99 | 3.74 | 0.23 | 0.54 | 0.48 |
| 21 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், கும்பகோணம் | 1.26 | 0.99 | 0.08 | 0.20 | 0.00 |
| 22 | ஆயுத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம் | 1.04 | 0.74 | 0.09 | 0.21 | 0.00 |
| 23 | கயிறு குழுமம், ஈரோடு | 5.93 | 4.04 | 0.48 | 0.60 | 0.79 |
| 24 | பொறியியல் குழுமம், அம்பத்தூர் | 11.24 | 8.05 | 0.54 | 1.15 | 1.50 |
| 25 | தங்க நகைக் குழுமம், திருச்சி | 3.60 | 2.88 | 0.36 | 0.36 | 0.00 |
| 26 | பொறியியல் குழுமம், இராணிப்பேட்டை | 9.27 | 6.16 | 0.97 | 1.09 | 1.04 |
| **மொத்தம்** | | **141.34** | **97.39** | **11.13** | **20.65** | **12.18** |

## இணைப்பு – 4
## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்தில் உள்ள 16 பொது வசதி மைய திட்டங்கள்

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல் சூளை குழுமம், திருநெல்வேலி மாவட்டம் | 2.27 | 1.23 | 0.23 | 0.30 | 0.52 |
| 2 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம் மாவட்டம் | 13.34 | 8.86 | 0.99 | 1.62 | 1.87 |
| 3 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லை வாயில் திருவள்ளூர் மாவட்டம் | 3.45 | 1.98 | 0.90 | 0.57 | 0.00 |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப்பட்டி விருதுநகர் மாவட்டம் | 3.47 | 2.05 | 0.36 | 0.43 | 0.64 |
| 5 | பின்னலாடைக் குழுமம், திருப்பூர் மாவட்டம் | 15.34 | 8.34 | 3.00 | 4.00 | 0.00 |

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|---|
| 6 | மரக்கலன்கள் குழுமம், சேலம் மாவட்டம் | 14.46 | 10.67 | 1.89 | 1.89 | 0.00 |
| 7 | கனரக வாகன கட்டுமானக் குழுமம், நாமக்கல் மாவட்டம் | 16.53 | 12.82 | 1.86 | 1.86 | 0.00 |
| 8 | ஆடை குழுமம், திருப்பூர் மாவட்டம் | 16.25 | 8.57 | 3.00 | 4.68 | 0.00 |
| 9 | அச்சு மற்றும் அட்டை பெட்டி குழுமம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 13.95 | 11.04 | 1.39 | 1.52 | 00.00 |
| 10 | விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம் | 12.19 | 9.31 | 1.22 | 1.26 | 0.40 |
| 11 | நுலாடை முறுக்குதல் மற்றும் குறுக்குதல் குழுமம், பெருந்துறை ஈரோடு மாவட்டம் | 18.68 | 9.63 | 1.87 | 7.18 | 0.00 |

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|---|
| 12 | விசைத்தறி குழுமம், இராசிபுரம் நாமக்கல் மாவட்டம் | 20.09 | 11.99 | 2.51 | 5.59 | 0.00 |
| 13 | ஆடை வடிவமைப்புக் குழுமம், திருப்பூர் மாவட்டம் | 14.67 | 9.79 | 1.47 | 3.41 | 0.00 |
| 14 | கம்பளி ஆடை குழுமம் குன்னூர் நீலகிரி மாவட்டம் | 2.84 | 2.27 | 0.28 | 0.28 | 0.00 |
| 15 | விசைத்தறி குழுமம், பல்லடம் திருப்பூர் மாவட்டம் | 17.59 | 11.52 | 1.76 | 4.31 | 0.00 |
| 16 | அச்சுக் குழுமம், சேலம் மாவட்டம் | 13.47 | 10.76 | 1.35 | 1.35 | 0.00 |
| **மொத்தம்** | | **198.59** | **130.83** | **24.08** | **40.25** | **3.43** |

## இணைப்பு – 5

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட 6 பொது வசதி மைய திட்டங்கள்

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகப் பொருட்கள் குழுமம், கரூர், கரூர் மாவட்டம் | 15.07 | 11.79 | 1.51 | 1.78 | 0.00 |
| 2 | தங்க நகை குழுமம், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் | 7.48 | 5.99 | 0.75 | 0.75 | 0.00 |
| 3 | ஆடை அச்சு குழுமம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம் | 14.67 | 11.85 | 1.00 | 1.82 | 0.00 |
| 4 | தங்க நகை குழுமம், சென்னை, சென்னை மாவட்டம் | 10.32 | 8.25 | 1.03 | 1.03 | 0.00 |
| 5 | தங்க நகை குழுமம், கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் | 15.30 | 11.81 | 1.53 | 1.96 | 0.00 |
| 6 | பசுமை ஏலக்காய் குழுமம், தேனி, தேனி மாவட்டம் | 14.26 | 11.28 | 1.43 | 1.55 | 0.00 |
| **மொத்தம்** | | **77.10** | **60.97** | **7.25** | **8.89** | **0.00** |

## இணைப்பு – 6

### குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் முடிவடைந்த திட்டம்

(ரூ. கோடியில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | தமிழ்நாடு அரசு மானியம் |
|---|---|---|---|
| 1 | அட்டை பெட்டி குழுமம், திருப்பூர் | 3.90 | 2.50 |

### குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள 6 திட்டங்கள்

(ரூ. கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | தமிழ்நாடு அரசு மானியம் |
|---|---|---|---|
| 1 | ஈரோடு தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், ஈரோடு மாவட்டம் | 6.52 | 2.33 |
| 2 | காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், திருவள்ளூர் மாவட்டம் | 4.64 | 2.33 |

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்ட மதிப்பு** | **தமிழ்நாடு அரசு மானியம்** |
|---|---|---|---|
| 3 | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி –I தொழிற்சாலை ஆலைக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2.60 | 1.80 |
| 4 | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி–II பொது வசதி மையம், காஞ்சிபுரம் மாவட்டம் | 5.01 | 2.50 |
| 5 | வெள்ளி கொலுசு குழுமம், சிவதாபுரம், சேலம் மாவட்டம் | 2.50 | 1.75 |
| 6 | நெகிழி குழுமம், அப்பநாயக்கன்பட்டிபுதூர், சூளூர் வட்டம் கோயம்புத்தூர் மாவட்டம் | 4.00 | 2.50 |
| **மொத்தம்** | | **25.27** | **13.21** |



நியாய வர்த்தக சான்றிதழை இண்ட்கோசர்வ் பெற்றதற்காக **02.07.2021** அன்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்பட்டது



2021–22ஆம் ஆண்டில் முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ்
கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | ஊதுபத்தி தயாரித்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 41.55 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 10.38 இலட்சம் |



2021–22ஆம் ஆண்டில் முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ்
தூத்துக்குடி மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | தீப்பெட்டி தயாரித்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 221.64 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 50.00 இலட்சம் |




2021–22ஆம் ஆண்டில் முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ்
நீலகிரி மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | சாக்லேட் தயாரித்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 39.72 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 8.43 இலட்சம் |



2021–22ஆம் ஆண்டில் முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ்
சிவகங்கை மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | முகக் கவசம் தயாரித்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 8.50 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 2.12 இலட்சம் |



2021–22ம் ஆண்டில் PMEGP திட்டத்தின் கீழ்
கோயம்புத்தூர் மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | பாக்கு மட்டை தட்டு தயாரித்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 10.50 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 2.62 இலட்சம் |




2021–22ஆம் ஆண்டில் UYEGP திட்டத்தின் கீழ்
தேனி மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | மருந்து கடை |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 5.00 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 1.25 இலட்சம் |



2021–22ஆம் ஆண்டில் குறைந்தழுத்த மின் மானியத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | நூல் முறுக்கேற்றுதல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 100.52 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 1.96 இலட்சம் |



2021–22ஆம் ஆண்டில் NEEDS திட்டத்தின் கீழ்
தேனி மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | சமையலறை வடிவமைத்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 42.80 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 10.70 இலட்சம் |



2021–22ஆம் ஆண்டில் பின் முனை வட்டி மானிய திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் பயன்பெற்ற நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் பெயர் | : | ஆயத்த ஆடை தயாரித்தல் |
| 2. | திட்ட மதிப்பீடு | : | ரூ. 45.00 இலட்சம் |
| 3. | மானியம் | : | ரூ. 1.96 இலட்சம் |



பொது உற்பத்தி உட்கட்டமைப்பு வசதி மையம்,
பெருந்தொழுவு கிராமம், திருப்பூர் மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | குழுமத்தின் பெயர் | : | திருப்பூர் அட்டை பெட்டி குழுமம் |
| 2. | மொத்த திட்ட மதிப்பு | : | ரூ.389.80 இலட்சம் |
| 3. | தமிழ்நாடு அரசின் மானியம் | : | ரூ.250.00 இலட்சம் |